



CARBON NEUTRAL 2050

ANNUAL REPORT 2020

2050 இல் கார்பன் நடுநிலைமை

ஆண்டு அறிக்கை 2020


ANNUAL REPORT 2020

# CARBON NEUTRAL BY 2050






ශ්‍රී ලංකා සුභාවී බලශක්ති අධිකාරිය
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
Sri Lanka Sustainable Energy Authority





# 2050 இல் காபன் நடுநிலை

பனிப்
பாறைகள் உருகுவதன்
காரணமாகவும் கடல் மட்டம்
உயர்வதாலும் ஒரு தீவு என்ற முறையிலே
இலங்கைக்கு இவை அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாலும்
இலங்கையர்களாகிய நாம் பூகோளம் வெப்பமடைவதன்
காரணமாக பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றோம்.
இதன் காரணமாக காபன் வெளிப்படுத்தலுக்கு எதிராக உறுதியான
நிலைப்பாட்டினை மேற்கொள்வது அவசியமாகும், மாற்றத்திற்கான நேரம்
காலாவதியாவதற்கு முன்னர் இதனை மேற்கொள்ள வேண்டும். பூகோளம்
வெப்பமடைதல் தொடர்பான எச்சரிக்கை அவ்வப்போது மீண்டும் வெளிவந்த
போதும், மேலதிக தாமதங்கள் இன்றி உரிய காலநிலை தொடர்பான செயற்பாடுகளை
மேற்கொள்வதன் அவசியம் பற்றி அடிக்கடி எமக்கு நினைவூட்டப்பட்டது.

எதிர்காலத்தில் நிகர பூச்சிய உமிழ்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற
அதேவேளை, 2050 ஆம் ஆண்டில் காபன் நடுநிலை அந்தஸ்தினை அடைவதற்கான
நிகழ்ச்சி திட்டம் ஒன்றினை இலங்கை முன்னெடுத்துள்ளது, மேலும் 2030 ஆம் ஆண்டளவில்
இவ் இலக்கின் 70% இனை அடைவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு காலப்
பகுதியிலிருந்து எமது இலக்கான 30% ஐ அடைவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு
வருகின்றோம், காலநிலை தொடர்பான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்கின்ற
அதேவேளை கைத்தொழிற்துறைகள், வீடுகள், சமுதாயங்கள் ஆகியவற்றில் அடிப்படை
காரணிகள் தொடர்பான மாற்றத்தை இயலுமையாக்கியுள்ளோம்.

எமது தொலைநோக்கானது தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் பொருந்துவது மாத்திரம்
அல்லாது உலகளாவிய ரீதியிலும் பொருந்துவதாக காணப்படுகின்றது.
இலங்கையில் நிலைபேறான சக்தி தொடர்பான அதிஉயர்வான அமைப்பு
என்ற முறையில் புவி வெப்பமடைதல் தொடர்பான தாக்கத்தினை
இலங்கையில் மட்டுப்படுத்துவதற்கும் வாழக்கூடிய கோளாக
இதனை மாற்றுவதற்கும் எதிர்காலத்தில் நிலைபேறான
முறையில் திகழ்வதற்கும் நாம் இலங்கையர்களை
வலுப்படைத்து இயலுமையுள்ளவர்களாக
மாற்றியுள்ளோம்.

# வரைபடக்கலை



## 04 - 17 எம்மைப் பற்றி


| | |
|---|---|
| எமது தொலைநோக்கு.˙. இலக்கு | 4 - 5 |
| எம்மைப் பற்றி | 6 |
| இந்த அறிக்கை பற்றி | 7 |
| செயலாற்றுகை தொடர்பான முக்கிய அம்சங்கள் | 8 - 9 |
| பிரதான மைல்கற்கள் | 10 - 11 |
| தவிசாளரின் செய்தி | 12 - 13 |
| பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 14 - 15 |
| முகாமைத்துவ சபை | 16 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 17 |


## 18 - 19 கூட்டுறவு ஆளுகை


| | |
|---|---|
| கூட்டுறவு ஆளுகை | 18 |
| இடர் முகாமைத்துவம் | 19 |


## முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு 22 - 30


| | |
|---|---|
| செயலாற்றுகை மீளாய்வு | 22 - 28 |
| செயல்திட்டம் 2021 | 29 - 30 |


## 32 - 52 நிதிக் கூற்றுகள்


| | |
|---|---|
| வருமானக் கூற்று | 32 |
| நிதி நிலை கூற்றுகள் | 33 |
| உரிமை முதல் மாற்றங்கள் தொடர்பான கூற்று | 34 |
| காசோட்ட கூற்றுகள் | 35 |
| நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 36 - 52 |
| கூட்டுறவு தகவல் உள் கறுப்பு அட்டை | |


## தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வு அறிக்கை 54 - 60


| | |
|---|---|
| தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வு அறிக்கை | 54 - 60 |

DRAFT 03

# எமது தொலைநோக்கு








“சக்திப் பாதுகாப்பான இலங்கை”

DRAFT 03
06.02.2023



# எமது இலக்கு

சிறப்பான நிலைபெறுதன்மைமிக்க செயன்முறைகளைத் தழுவி இயற்கை, மனித, பொருளாதார செல்வத்தை பாதுகாத்து இலங்கையானது சக்தி ரீதியான பாதுகாப்பினை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு, எமது தேசிய அபிவிருத்தி பயணத்தில் ஆய்வுகள், இலகுபடுத்தல், ஆராய்ச்சி, அபிவிருத்தி, அறிவு முகாமைத்துவம் ஆகியவற்றின் மூலம் சுதேச சக்தி வளங்கலை அபிவிருத்தி செய்தல் மற்றும் சக்தி மூலங்களை பாதுகாத்தல் ஆகியன தொடர்பான சகல முயற்சிகளின் பொழுதும் தேசத்திற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

DRAFT 03
06.02.2023

# எம்மைப் பற்றி

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட 2007, 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தினை நிறை வேற்றுவதற்காக 2007 ஒக்டோபர் 01 ஆம் திகதி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) தாபிக்கப்பட்டது.**





இலங்கை நிலைபெறுதகு வலு புரட்சியை முன்னெடுப்பதற்கு பொறுப்பான முன்னோடி ஆட்சி அமைப்பாக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) காணப்படுகின்றது. இலங்கையின் சக்தி சார்ந்த தேவைகளை வினைத்திறன்மிக்க முறையில், பயனுறுதிமிக்க முறையில், சுற்றாடல் நேய முறையில் இலங்கையின் வலு சார்ந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு இலகுபடுத்தக்கூடிய வகையில் நிலைபேறான வலு மூலங்களை பாத்திரமான முறையில் இனங் கண்டு இலங்கை முழுவதும் வினைத்திறன் மிக்க சக்தியை முன்னெடுத்துச் செல்லும் பிரதான நிறுவகம் ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டது. இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்ற முக்கிய நிறுவனம் என்ற முறையில் எமது நாட்டின் காத்திரமான சக்தி மூலங்களின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக பங்களிப்புச் செய்வதை இலகுபடுத்துவதை இலக்காகக் கொண்டு நாம் செயற்படுகின்றோம். அத்தோடு சூரிய சக்தி, காற்று, நீர் மின் வலு, உயிர் வலு ஆகியவற்றை இது உள்ளடக்கியுள்ளது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையானது சக்தித் துறையில் உபாய ரீதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன் காரணமாக இலங்கையில் எதிர்காலத்தில் தேவையான, நிலைபேறான, சுதேசிய மூலமிடப்பட்ட தேசிய தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துகின்றது. எமது சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கான இலக்குகளை முன்னெடுக்கின்ற அதேவேளை நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் தேசத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் அறிவுப் பரிமாற்றல் ஆகியவற்றை இயலுமையாக்கச் செய்து அதன் மூலம் எமது சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

# இந்த அறிக்கை பற்றி

DRAFT 03
06.12.2021



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் எமது பங்கீட்டுபாட்டாளர்களுடன் எமது அமைப்பு பற்றிய பூரணத்துவமிக்க தோற்றப்பாட்டுடன் வருடாந்த காலப் பகுதியில் அதன் ஒட்டுமொத்த செயலாற்றுகைகளையும் உள்ளடக்கி இந்த வருடாந்த அறிக்கையை நாம் சமர்ப்பிக்கின்றோம்.

## அறிக்கையிடும் தராதரங்கள் மற்றும் கொள்கைகள்

இந்த வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப காணப்படுகின்றது என்பதையும், அமைப்பின் ஆளுகை கட்டமைப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்ப காணப்படுகின்றது என்பதையும் அத்தோடு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளானது இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு ஏற்ப (SLFRS, LKASs) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் உரிய முறையில் கணக்காய்வு செய்யப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

## நோக்கெல்லை மற்றும் எல்லை

அமைப்பின் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக வருடாந்த அறிக்கையில் விசேடமாக பிரிவொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல தகவல்களும் அடிப்படையில் 2020 சனவரி 01 முதல் 2020 டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதிக்கான அலுவல்கள் சார்ந்த தொழிற்பாடுகளுடன் தொடர்புடையவை.

DRAFT 03
06.02.2023

# செயலாற்றுகை தொடர்பான முக்கிய அம்சங்கள்

மீள புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி

GWh 1,866 2020

1,579 - 2019

சிறிய நீர் மின்வலு கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள்

MW 421 2020

419 - 2019

சூரிய மின் சக்தி கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் (நிலத்தில் பொருத்தப்பட்டவைகள்)

MW 75 2020

57 - 2019

காற்று சார்ந்த கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள்

MW 148 2020

128 -2019

உயிர்திரள் கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள்

MW 53 2020

43 - 2019

தேசிய மின் உற்பத்தியுடன் தொடர்புடைய கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கலங்களது கூட்டிணைந்த எண்ணிக்கை

No. 31,165 2020

24,696 - 2019

வினைத்திறன்மிக்க உபகரணங்கள் மூலம் சேமிக்கப்படும் மின் சக்தி

GWh 780 2020

738 - 2019

கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கல கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள்

MW 337 2020

261 - 2019

DRAFT 03
06.02.2023



| விளக்கம் | அலகு | 2019 | 2020 |
|---|---|---|---|
| **செயலாற்றுகை தொடர்பான முக்கிய அம்சங்கள்** | | | |
| புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி | GWh | 1,579 | **1,866** |
| சிறிய நீர் மின்வலு கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் | MW | 419 | **421** |
| சூரிய மின் சக்தி கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் (நிலத்தில் பொருத்தப்பட்டவைகள்) | MW | 57 | **75** |
| காற்று சார்ந்த கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் | MW | 128 | **148** |
| உயிர்திரள் கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் | MW | 43 | **53** |
| தேசிய மின் உற்பத்தியுடன் தொடர்புடைய கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கலங்களது கூட்டிணைந்த எண்ணிக்கை | No. | 24,696 | **31,165** |
| கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கல கருத்திட்டங்களிலிருந்தான கூட்டிணைந்த ஆற்றல்கள் | MW | 261 | **337** |
| கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கல கருத்திட்டங்களிலிருந்தான உருவாக்கம் | GWh | 362 | **250** |
| வினைத்திறன்மிக்க உபகரணங்கள் மூலம் சேமிக்கப்படும் மின் சக்தி | GWh | 738 | **780** |
| SLSNEA இடையீடுகள் மூலமாக சேமிக்கப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை | GWh | n/a | **n/a** |
| SLSNEA இடையீடுகள் மூலமாக சேமிக்கப்பட்ட சூலை எண்ணெய் அலகுகள் | மில். லீட்டர்கள் | n/a | **n/a** |
| காபனீரொட்சைட்டு தவிர்க்கப்பட்டவை | மெட்ரிக் தொன் | 2,090,338 | **2,259,749** |
| **மனித மூலதனம்** | எண். | 104 | **100** |
| SLSEA இன் மொத்த பணியாளர்கள் | எண். | 54 | **54** |
| 10 வருடத்திற்கு மேற்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | எண். | 77 | **79** |
| 5 வருடத்திற்கு மேற்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | ரூபா. மில். | 92 | |
| **சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்** | | | |
| மேற்கொள்ளப்பட்ட வலு சார் கணக்காய்வுகளின் எண்ணிக்கை | எண். | 25 | **5** |
| சக்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை | எண். | 7 | **2** |
| நாளொன்றுக்கு வாடகைக்கு அமர்த்தப்படும் உபகரணங்களின் எண்ணிக்கை | நாட்கள் | 1,710 | **900** |
| வெளியிடப்பட்ட தராதரம்மிக்க சக்தி தரநிலை எண்ணிக்கை | எண். | 2 | **1** |
| ஹம்பாந்தோட்டை சூரிய மின் கல பூங்காவிற்கு விஜயம் செய்தவர்களின் எண்ணிக்கை | எண். | 1,100 | **560** |
| SLSEA இல் பதிவு செய்யப்பட்ட சூரிய மின் கல சேவைகள், கம்பனிகளின் எண்ணிக்கை | எண். | 327 | **442** |
| வெளியிடப்பட்ட தராதரமிக்க சூரிய மின் கல எண்ணிக்கை | எண். | 1 | **1** |
| சமய மற்றும் அரசாங்க வளாகத்தினுள் கூரையில் பொருத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை | எண். | - | **-** |
| இலகுபடுத்தப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | எண். | 6 | **1** |
| வெளியீடுகளின் எண்ணிக்கை | எண். | 8 | **7** |

*மதிப்பிடப்பட்டவைகள்

DRAFT 03
06.02.2023

# பிரதான மைல்கற்கள்



## 2007

- இலங்கை சூரிய வளங்கள் அட்லஸ் வெளியிடப்பட்டது

## 2010

- விதுல்க கண்காட்சி, கருத்தரங்கு, தேசிய சக்தி வினைத்திறன் விருதுகள் மேற்கொள்ளப்பட்டமை
- கம்பெக்ட் புளோரஸன்ட் விளக்குகள் தொடர்பான முதலாவது கட்டாய சக்தி சிட்டுகள் உற்பத்தி
- கூரையில் பொருத்தப்பட்ட மின் உற்பத்திக்காக தேறிய மானி திட்டம் தாபிக்கப்பட்டமை

## 2011

- பாடசாலை சக்தி கழகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை
- ஹம்பாந்தோட்டையில் முதலாவது 1.237 மெகாவோட்ஸ் சூரிய மின் கல பொறித் தொகுதி

## 2014

- SLSEA தாபிக்கப்பட்டது.
- தரம் 6 முதல் 11 வரையிலான தேசிய விஞ்ஞான பாடத் திட்டத்திற்கு நிலைபேறான சக்தி பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2015

- புதிய புத்தாக்க சக்திகளிலிருந்து மின் உற்பத்தியின் 10% பங்கினை அடைந்தமை, இதனால் கொள்கை சார் இலக்குகள் உணரப்பட்டது.


## 2016

- கூரையில் சூரிய மின் கலங்களை பொருத்துகின்ற சூரிய பல சங்கிரமய நிகழ்ச்சித்திட்டம் மூலம் தற்போதைய மானி திட்டம் மேம்படுத்தப்பட்டது.

## 2017

- 10 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் DSM தொழிற்பாடு தொடர்பான சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது.

DRAFT 03
06.02.2023




- சூரிய பல சங்கிரமய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கூரையில் பொருத்துகின்ற சூரிய மின் கல திட்டத்திற்காக 100 மெகாவாட் இலக்கு அடையப்பட்டது.
- UNDP/FAO/GEF ஆகிய கருத்திட்டங்களுக்காக நிலைபேறான உயிர் திரள் சக்தி கருத்திட்டம் அதிக திருப்தியுடன் பூரணப்படுத்தப்பட்டது.

- தேசிய சக்தி கொள்கை மற்றும் இலங்கை உபாயமுறைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- இலங்கை நிலைபேறான சக்தி வீடுகள் தொடர்பான வழிகாட்டிகள் பிரசுரிக்கப்பட்டமை.
- UNDP/FAO/GEF தொடர்பான சக்தி நாம கருத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது.

- புத்தாக்க சக்தி மூலம் 1000 மெகாவாட் அடையப் பெற்றது.
- கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் கலம் மூலம் 300 மெகாவாட் இற்கு அதிகமாக பெறப்பட்டது.
- சிவிலின் மின் விசிறிகள் மற்றும் குளிர் சாதனப் பெட்டி தொடர்பான ஒழுங்குவிதிகள் இறுதிப்படுத்தப்பட்டது.
- விளக்குகளுக்கான சக்தி தரநிலை நிகழ்ச்சித்திட்டங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

DRAFT 03
06.02.2023

# தவிசாளரின் செய்தி

கோவிட் 19 பெருந் தொற்றின் காரணமாக அண்மைக் கால வரலாற்றில் 2020 ஆம் ஆண்டு சவால்மிக்க வருடமாக காணப்பட்ட பொழுதிலும் கூட, இத்தகைய சோதனைமிக்க காலப் பகுதியில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையை தலைமை தாங்கி இந்த அறிக்கையை சமர்ப்பிப்பது ஒரு சிறப்புரிமை என நான் கருதுகின்றேன். இத்தகைய பின்புலத்தில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையானது (SLSEA) குறிப்பிட்ட வருட காலப் பகுதியின் பொழுது நியாயமான முன்னேற்றத்தினை அடைந்தது. அத்தோடு 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

## மீள் புதுப்பிக்கத்தகு சத்திக்கான புதிய இலக்குகள்

2019 ஆம் ஆண்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மீள் புத்தாக்க சக்தியின் முக்கியத்துவத்தை அவர் குறிப்பிட்டதுடன் நாட்டின் ஒட்டுமொத்த மின் துறையில் இது எந்தளவுக்கு முக்கியமானது என்பதையும் உணர்ந்து இருந்தது. இதில் நீர் மின் வலு, அனல் மின்சாரம், நிலக்கரி, மாற்றீட்டு புத்தாக்க சக்திகள் ஆகியன உள்ளடங்குகின்றன. 2030 ஆம் ஆண்டில் நாட்டின் புத்தாக்க மின் உற்பத்தியானது 40% இனால் அதிகரிக்கும் எனவும் நீர் மின் வலு மற்றும் புத்தாக்க சக்தி ஆகியன ஒட்டுமொத்த மின் உற்பத்தியில் 80% ஆக திகழும் எனவும் கூறப்பட்டது. புதிய அரசாங்கத்தின் கொள்கை இலக்குகளை அடைவதற்காக நிலைபேறான மின் உற்பத்தி அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் சக்தி துறையில் சர்வதேச சமகால பூகோள போக்குகளுக்கு ஏற்ப இலங்கை மாற்றியமைக்கப்பட்டது.

ஊழியர்களை பெற்றுக் கொண்டு பெருந்தொற்று காலப் பகுதியில் நிலவிய மட்டுப்பாடுகளை கருத்திற் கொண்டு வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் SLSEA ஆனது பல்வேறு வகையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இதில் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பயிற்றுப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான 05 நாள் செயலமர்வு முக்கியமானதாகும். பாடசாலை மாணவர்களுக்கான சக்தி தொடர்பான கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், முன்பள்ளி மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலை சக்தி கழக நிகழ்ச்சித் திட்டங்கள், சாரணர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் ஆகியன கோவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக பாடசாலைகள் மூடியிருந்தமையினால் பாதிக்கப்பட்டன. இத்தகைய சகல விடயங்களிலும் 2021 ஆம் ஆண்டில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் ஏற்படலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

கோவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக இலங்கையில் இருக்கின்ற கிராமிய மக்களுக்கு உதவுவதற்கான எமது திட்டங்களும் பாதிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நக்கல்ஸ் மலைத் தொடரில் காணப்படுகின்ற தொலைவில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கு மின்சாரத்தை 2021 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். பல்வேறு காரணிகளின் நிமித்தம் சில அரசாங்க நிறுவனங்களுடன் பணியாற்றுவது சவால்மிக்கதாக காணப்படுகின்றது. எமது இலக்குகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்லும் முகமாக சம்பந்தப்பட்ட சகல பங்கீட்டுபாட்டாளர்களுடன் ஆக்கபூர்வமாக செயற்படும் முகமாக எமது அதிகார சபையானது காத்திரமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 2020 ஆம் ஆண்டை மீட்டிப் பார்த்தல்

புதிய சனாதிபதியின் தொலைநோக்குமிக்க பார்வை, 2020 ஆம் ஆண்டில் நாடு புதிய பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டமை ஆகியவற்றை கருத்திற் கொண்டு நோக்குகையில் இவ்வருடத்தில் சிறப்பான எதிர்பார்ப்புகள் காணப்பட்டதுடன் எமது புத்தாக்க சக்தி உருவாக்க இலக்குகளை துரிதப்படுத்துவதற்கான முக்கிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் இவ்வருட ஆரம்பக் காலப் பகுதியின் பொழுது கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக இலங்கையிலுள்ள சகல அரசாங்க நிறுவனங்களது செயற்பாடுகளையும் பாரியளவு இது தாக்கியதுடன் கோவிட் 19 வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. பொறுப்பு வாய்ந்த நிறுவனம் என்ற முறையில் எமது ஊழியர்கள் தொடர்ச்சியாக SLSEA உடன் தொடர்ந்து பணியாற்றுவதன் காரணமாக எமது ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்காக மிகவும் கவனமான நடவடிக்கைகளை நாம் திட்டமிட்டோம். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் வருடம் முழுவதும் வெற்றிகரமான சேவைகளை எம்மால் வழங்க முடிந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

நாட்டின் வரலாற்றில் முதன் முதலாக புத்தாக்க சக்தி மூலமாக 1000 மெகாவாட் மின் உற்பத்தி இலக்கை நாம் அடைந்தது மிகவும் முக்கியமான அடைவாகும். இது எமது நாட்டிற்கு சிறப்பான அடைவாக காணப்பட்டதுடன் எமது எதிர்கால இலக்குகளுக்கும் உந்துதலாக காணப்பட்டது. 2007 ஆம் ஆண்டு SLSEA தாபிக்கப்பட்டதுடன் இதற்கு முன் காணப்பட்ட நிறுவனமான சக்தி பாதுகாப்பு நிதியத்திலிருந்து தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இலக்குகளை அடைவதற்கு அவசியமான பிரேரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அவசியமான ஒப்புதல்களை பெற்றுக் கொள்வது பல வருடங்களாக சவால்மிக்கதாக காணப்பட்டது. வருட காலப் பகுதியின் பொழுது ஆட்சேர்ப்பு

## எதிர்கால தோற்றப்பாடு

2021 ஐ முன்னோக்கி நோக்குகையில் கோவிட் பெருந்தொற்றின் தாக்கமானது குறிப்பிடக்கூடிய அளவுக்கு எதிர்காலத்தை தாக்கும் என்பது தெளிவாக புலப்படுகின்றது. அதாவது நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பாலும் சகல அம்சங்களும் எதிர்மறையாக தாக்கப்படலாம். இருப்பினும், எமது மத்திய மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையும் முகமாக எமது பல்வேறு வகையான முன்னெடுப்புகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றை கண்டறியும் முகமாக எமது சகல பங்கீட்டுபாட்டாளர்களுடன் கூட்டிணைந்து செயலாற்றுவதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எமது புத்தாக்க சக்தி ஆற்றல்களை அதிகரிப்பதன் மூலம் சக்தி பாதுகாப்பினை அடைவதை விசேடமாக கருத்திற் கொண்டு சகல விடயங்களிலும் முன்னேற்றம் அடைவதற்கு நாம் முயற்சிக்கின்ற அதேவேளை இச்செயலானது இன்றைய நிச்சயமற்ற சூழ்நிலையில் இலங்கை பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியமான புதுப்பிக்கத்தக்க சக்தி சார்ந்த ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு உதவும்.

DRAFT 03
06.02.2023





## நன்றி நவிலல்

எனது செய்தியை நிறைவு செய்து கொள்வதற்கு முன்னர் இந்த சந்தர்ப்பத்தில் மின்வலு மற்றும் சக்தி அமைச்சைச் சேர்ந்த பிரதான நபர்களுக்கும் குறிப்பாக கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கும் அமைச்சைச் சேர்ந்த ஏனைய ஊழியர்களுக்கும் இவ்வருட காலப் பகுதியின் பொழுது அவர்கள் வழங்கிய சிறப்பான பங்களிப்பிற்கும் வழிகாட்டல்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கோவிட் பெருந்தொற்று மிகவும் பாதகமாக தாக்கிய சூழ்நிலையில் முக்கிய அறிவூட்டல்களையும் அர்ப்பணிப்புகளையும், கடும் உழைப்பையும் வழங்கிய சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதான அதிகாரிகள் மற்றும் SLSEA ஐச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வருடம் முழுவதும் சகல பங்கீட்டுபாட்டாளர்களும் வழங்கிய உதவிக்காக அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பெருந்தொற்றினால் ஏற்பட்ட எதிர்மறையான, பாதகமான சூழ்நிலையிலும் கூட எமது பயணத்தை விவேகமாக மேற்கொண்டு வந்தோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒரு குழுவாக அணி திரண்டு எமது நிலைபேறான சக்தி இலக்குகளை நோக்கி தொடர்ந்தும் எமது நாட்டை முன்னெடுத்துச் செல்வோம்.

ரன்ஜித் சேபால
தவிசாளர்

DRAFT 03
06.02.2023

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



எதிர்பாராத பல்வேறு சவால்களை எதிர்கொண்ட வருடம் ஒன்றின் இறுதிக்கு நாம் பிரவேசித்துள்ளோம். இருப்பினும், SLSEA ஆனது சவால்களை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றிகரமான வருடம் ஒன்றினை பதிவு செய்துள்ளது. SLSEA இன் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் வருட காலப் பகுதியின் பொழுது எமது அமைப்பின் செயலாற்றுகைகளை நான் பெருமையுடன் மீட்டிப் பார்க்கின்ற அதேவேளை எமது முன்னேற்றம் தொடர்பான எனது கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

DRAFT 03
06.02.2023



## 2020 ஆம் ஆண்டின் முக்கிய அம்சங்கள்

கோவிட் 19 இன் காரணமாக அண்மைக் காலங்களில் 2020 ஆம் வருடமானது ஒரு கடுமையான வருடமாகக் காணப்பட்டது. உலகளாவிய ரீதியில் அன்றாட செயற்பாடுகளை இது குழப்பியதுடன் முழு நாட்டையும் முடக்கச் செய்தது. நாம் துரிதமாக வீட்டிலிருந்து வேலை செய்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் பெருந் தொற்றினால் பல்வேறு விதமான அபாயகரமான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்ட பொழுதிலும் எமது பெரும்பாலான ஊழியர்கள் முழு ஆற்றலுடன் தமது பங்களிப்புகளை வழங்க முடிந்தது. இக்காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் முடக்கங்கள், மட்டுப்பாடுகள் காணப்பட்ட பொழுதிலும் கூட இவர்களது பங்களிப்புகள் சிறப்பாக காணப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சி அல்லது அதன் மேம்பாட்டின் காரணமாக எமது சேவைகளை தொடர்ச்சியாக பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் சிறிதளவான காலதாமதம் அல்லது எத்தகைய காலதாமதமும் தடையும் இன்றி வழங்க முடிந்தது.

மேதகு சனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் இலங்கையின் சுபீட்சத்திற்கான தொலைநோக்கின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மீளபுதுப்பிக்கத்தக்க சக்தி இலக்கானது 20% அடையப்படல் வேண்டும். இது ஆரம்ப கட்டமான 50% இலக்கை விட அதிகமாகும். இதுவோர் முன்னேற்றகரமான படிமுறையாகக் காணப்படுகின்றது. இந்த இலக்கை சாத்தியப்பாடுள்ளதாக மாற்றுவதற்கு நாம் குறிப்பிடக்கூடிய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 05 வருட காலப் பகுதியில் நாம் 05 வருட புத்தாக்க சக்தி வளங்கள் அபிவிருத்தி திட்டத்தை இறுதிப்படுத்தினோம். இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 08ஆம் பிரிவின் சட்ட ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதற்காக இது தொகுக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட சகல பங்கீட்டுபாட்டாளர்களுடன் பகிரப்பட்டது.

வரலாற்றில் முதன் முறையாக 1000 மெகாவாட் புத்தாக்க சக்தியை நாம் வெற்றிகரமாக அடைந்தது இந்த வருடத்தின் பிரதான நிகழ்வுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. எமது நாட்டிற்கு அதிகார சபைக்கு இதுவோர் சிறப்பான அடைவாகும். இதில் 423 மெகாவாட் சிறிய நீர் மின் வலு, 178 மெகாவாட் காற்று மின் உற்பத்தி, கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்கள் மூலமான 286 மெகாவாட், பாரிய அளவிலான சூரிய மின்கலங்கள் மூலமான 72 மெகாவாட் ஆகியன உள்ளடங்குகின்றன.

பெருந்தொற்றினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை வருட காலப் பகுதியின் பொழுது வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. இதன் மூலம் புத்தாக்க சக்தியை தேசிய திட்டத்துடன் இணைக்கக்கூடியதாக காணப்பட்டது. பெருந்தொற்றின் காரணமாக கடுமையான மட்டுப்பாடுகள் காணப்பட்ட பொழுதிலும் கூட எமது கருத்திட்டங்களை மிகவும் உன்னிப்பாக மேற்பார்வை செய்ய முடிந்ததுடன் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் சில திட்டங்களை ஆரம்பிக்கக்கூடியதாகவும் காணப்பட்டது. கூரையில் பொருத்தப்படுகின்ற சூரியக் கலங்களை பொருத்தவரையில் 2019 ஆம் ஆண்டில் 200 மெகாவாட் அடையக்கூடியதாக காணப்பட்டது. மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் இதனை 338 மெகாவாட் ஆக விரிவாக்கம் செய்ய முடிந்தது. மேலும் புதிதாக 74 சூரிய சக்தி மின்கல கம்பனிகளை பதிவு செய்ய முடிந்தது. மேலும் தற்போது காணப்படுகின்ற 200 கம்பனிகள் தமது பதிவினை நீடித்ததுடன் இதன் காரணமாக இலங்கையில் 230 சூரிய மின்கலம் தொடர்பான கம்பனிகள் காணப்படுகின்றன. அந்த கம்பனியிலிருக்கின்ற பிரதான நபர்களுக்காக பல்வேறு வகையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது பெருந்தொற்றின் பொழுது நேரடி பயிற்சிகளுக்கான சாத்தியப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில் இணையம் மூலமாக பொறியியலாளர்களுக்கும் மற்றும் தொழில்நுட்ப ஆளுமையினருக்குமான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நாட்டின் மிகப் பெரிய சூரிய சக்தி பூங்கா சியம்பலாண்டுவ 100 மெகாவாட் சூரிய மின்சக்தி பூங்காவின் ஆரம்பக் கட்ட வேலைகள் விருத்தி செய்யப்பட்டன. சுற்றாடல் தாக்க மதிப்பீடு உள்ளடங்கலாக அவசியமான சகல விதமான ஒப்புதல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இவை மேற்கொள்ளப்பட்டதோடு உலக வங்கியின் ஐகுஊ இன் உதவியுடன் பூனேரியின் சக்தி பூங்கா கருத்திட்டம் தொடர்பான ஆரம்பக் கட்ட ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டன மற்றும் காணியை கையகப்படுத்தும் விடயம் தொடர்பான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. காற்றாலை மின் உற்பத்தியுடன் தொடர்புடைய கருத்திட்டத்திற்கு முக்கிய விடயமான பறவைகள் பற்றிய ஆய்வு சார்ந்த விடயங்களும் பூரணப்படுத்தப்பட்டதுடன் சுற்றாடல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடு (நுளுஐயு) நடைமுறைப்படுத்துவதற்கான விடயங்களும் மேற்கொள்ளப்பட்டன. மன்னாரில் உள்ள காற்றாலை மின் உற்பத்திக்கான எஞ்சிய வேலைப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை மின்சார சபை மூலம் முதலாவது 100 மெகாவாட் கருத்திட்டம் விருத்தி செய்யப்பட்டது. மன்னார் தீவில் மற்றுமொரு 100 மெகாவாட் மின் உற்பத்தி கருத்திட்டத்திற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் கட்ட சாத்தியப்பாடு ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கருத்திட்டத்திற்கான காற்றை அளவிடும் செயன்முறைகள் மற்றும் நுளுஐயு ஆகியன மற்றும் காணியை கையகப்படுத்தும் செயன்முறைகள் ஆகியன முன்னெடுக்கப்பட்டன.

2025 ஆம் ஆண்டில் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்கள் மூலம் 1000 மெகாவாட் இலக்கை அடையும் நோக்கில் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியான (நுஏஇ டீயமெ) நிதியிடலான ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் நிதியிடலின் கீழ் கூரையில் சூரிய மின் கலங்களை பொருத்தும் கருத்திட்டமான சூரிய வள சங்கிரமய ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க நிறுவனங்கள் கூரைகளில் சூரிய மின்சக்தி கலங்களை பொருத்துவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படுவதுடன் அனுராதபுரம், மொனராகலை, ஹம்பந்தோட்டை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வசித்து வருகின்ற குறைவான வருமானமுடைய மக்களுக்கு சூரிய மின்சக்தியை வழங்குவதற்காக இது பயன்படுத்தப்படும். மேலும் வருட காலப் பகுதியின் பொழுது முதலாவது கடல் கடந்த செயற்திட்டத்திற்கான விடயங்களை நாம் ஆரம்பித்தோம். இதன் அடிப்படையில் என்னால் ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்து உலக வங்கியிடமிருந்து உதவிகளை பெற்றுக் கொண்டு இந்த கருத்திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவிகளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடிந்தது. இந்த கருத்திட்டம் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இது சம்பந்தமான பௌதீக ஆய்வுகளை மேற்கொண்டு இதனை செயன்முறைப்படுத்துவதற்கான வழிகாட்டிகளை விருத்தி செய்வதற்காக உலக வங்கி ஏற்கனவே ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளது.

கேள்வி தள முகாமைத்துவத்தின் பிரகாரம் வருட காலப் பகுதியின் பொழுது பொறுத்தமான இடையீடு சார்ந்த ஒழுங்குவிதிகளை கொண்டு வருவதற்கும் கைத்தொழிற்துறை, வீடு, வர்த்தக துறைகளில் சக்தி வினைத்திறன் செயற்பாடுகளை சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் முகமாக விழிப்பூட்டல்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. சிவிலின் மின் விசிறி மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளுக்கு சிட்டை ஒட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டமானது இறுதிப்படுத்தப்பட்டதுடன் டுநுனு விளக்குகளுக்கு சக்தி தொடர்பான சிட்டைகளை ஒட்டுவதற்கான விடயங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. தொலைக்காட்சிகள், ரைஸ் குகார்ஸ், நீர்த் தாங்கி, டுநுனு பெனல் ஆகியவற்றுக்கு சக்தி சிட்டைகளை ஒட்டுகின்ற தராதரங்கள் முன்னெடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை சக்தி துறை செயலாற்றுகை தொடர்பான வருடாந்த பகுப்பாய்வான இலங்கையின் எஞ்சிய சக்தி தொடர்பான ஆவணம் பிரசுரிக்கப்பட்டது.

DRAFT 03
06.02.2023

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

## முன்னோக்கிப் பார்த்தல்

அடுத்துவரும் மாதங்களிலும் வருடங்களிலும் பெருந்தொற்றானது சகலரது வாழ்க்கையிலும் வியாபாரங்களிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக நாடு எதிர்மறையாக பாதிப்படையலாம். அத்தோடு நாட்டை மீள் கட்டியெழுப்பி முன்னோக்கி நகர்வதற்கு ஒன்றிணைந்த முயற்சிகள் அவசியப்படுகின்றன. 2030 ஆம் ஆண்டில் 70% புத்தாக்க சக்தியை எம்மால் அடையக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு இன்னும் ஒரு தசாப்தம் இருக்கின்றது. இந்த இலக்கினை அடைவதற்கு எமது சகல முன்னெடுப்புகளும் ஒருங்கிணைய வேண்டும். சகல பாரிய அளவிலான கருத்திட்டங்களும் இங்கு முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. அதேவேளை 2030 ஆம் ஆண்டிற்கான எமது இலக்கை நோக்கிய பயணத்தை துரிதமாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கு அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற பங்கீட்டுபாட்டாளர்களின் காத்திரமான ஒத்துழைப்பு அவசியமாகும்.

## பாராட்டுதல்கள்

சவால்மிக்க இந்த காலப் பகுதியில் எமக்கு எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் உதவிகளை வழங்கிய மின்வலு அமைச்சர் அவர்களுக்கும் சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்வலு உற்பத்தி இராஜாங்க அமைச்சர், கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கும் மற்றும் ஏனைய அமைச்சின் அதிகாரிகளுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் பெறுமதியான கருத்துக்களை தெரிவித்த சபை உறுப்பினர்கள் மற்றும் SLSEA இன் பிரதான அதிகாரிகள் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இயங்காற்றல் தன்மைமிக்க SLSEA இன் சகல உறுப்பினர்களும் வருடம் முழுவதும் தமது அர்ப்பணிப்புமிக்க சேவை மற்றும் ஆர்வம் ஆகியவற்றின் மூலமாக பல விடயங்களை வென்றெடுப்பதற்கு உதவினர். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் எனக்கு உதவிகளை வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, எக்ஸ்ின் வங்கி மற்றும் அதுபோன்ற ஏனைய அமைப்புகள் ஆகியவற்றுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். தொடர்ச்சியாக தமது ஒத்துழைப்புகளை வழங்கிய அனைத்து பங்கீட்டுபாட்டாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஒரு குழுவாக நாம் இணைந்து பணியாற்றுவதன் சக்தி இங்கே புலப்படுத்தப்பட்டது. பெருந்தொற்றினால் ஏற்பட்ட எதிர்பார்க்காத சவால்களை நாம் அனைவரும் ஒன்றாக அணி திரண்டு முகங் கொடுத்தோம். இதன் மூலம் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்களை அடைந்தோம். இத்தகைய வெற்றிகரமான நடவடிக்கைகள் எதிர்வரும் மாதங்கள் மற்றும் வருடங்களில் எமது இலக்கினை அடைவதற்கு உந்துதலாகவும் உற்சாகமூட்டுவதாகவும் காணப்படும்.

டாக்டர் அஸங்க ரொட்ரிகோ
பணிப்பாளர் நாயகம்

DRAFT 03
06.02.2023

# முகாமைத்துவ சபை

**திருமதி. வசந்தா பெரேரா**
மின்சக்தி அமைச்சு செயலாளர்

**திரு. சிந்தக எஸ். லொகுஹெட்டி**
சனவரி முதல் ஆகஸ்ட் வரை

**திருமதி. ஈ.ஏ.ஆர். ரேணுகா**
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)
காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

**திருமதி. அன்ஜலிகா கே குணசேகர**
பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி, பொருளாதாரம்
மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

**திரு. தமித குமாரசிங்க**
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**திரு. ரோஹண தல்பவில**
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

**திரு. பூபதி கஹதுடுவ**
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

**திரு. லக்ஷ்மன் சில்வா**
நியமிக்கப்பட்ட உறுப்பினர்
ஜூன் முதல்

**திருமதி. குலனி எச் டப்ளியு கருணாரத்ன**
பணிப்பாளர் (சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்)
சுற்றாடல் அமைச்சு

**திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்),
போக்குவரத்து அமைச்சு

**திரு. ஜானக அம்பகஹவத்த**

**திருமதி. லதிசா லியனகே**
மேலதிகச் செயலாளர் (கொள்கை மற்றும் கருத்திட்ட மதிப்பீடு)
விவசாய அமைச்சு

**திரு. ரவீந்திர ஹேவாவிதாரன**
செயலாளர்
பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு

**திரு. கே.டீ. சித்ரபால**
சனவரி முதல் ஜூலை வரை

**திரு. நிஷாத் உபேந்திர**
நியமிக்கப்பட்ட உறுப்பினர்
மே முதல்

**திரு. சந்திரரத்ன விதானகே**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் நாயகம்
இலங்கை வர்த்தக சம்மேளம் (ஜூன் முதல்)

**திரு. டப்ளியு.ஜே.எல்.எஸ். பர்ணாந்து**
நியமிக்கப்பட்ட உறுப்பினர்
ஜூன் முதல்
இலங்கை சக்தி முகாமைத்துவ சங்கம்

**திருமதி. நயனா நதவிதாரன**
மேலதிகச் செயலாளர்
அரச சேவைகள் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

DRAFT 03
06.02.2023

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

## உறுப்பினர்கள்

திருமதி. அன்ஜலிகா கே குணசேகர
பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

திருமதி. நயனா நதாவிதாரன
மேலதிகச் செயலாளர்

பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு

திரு. பூபதி கஹதுடுவ
நியமிக்கப்பட்ட உறுப்பினர், SLSEA

## அவதானிப்பாளர்கள்

திருமதி. எச்.ஏ.டீ. சாந்தனி
கணக்காய்வு அத்தியட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம்

திருமதி. பி.ஏ.டீ. அபேவர்தன
பிரதம உள்ளக கணக்காய்வாளர், மின்சக்தி அமைச்சு

DRAFT 03
06.02.2023

# கூட்டுறவு ஆளுகை

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையானது சமத்துவம், நேர்மை, பக்கச்சார்பின்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்ற 05 கொள்கைகளின் அடிப்படையில் தொழிற்பட்டு வருகின்றது. இத்தகை ஆளுகை கொள்கைகளே இதன் அடித்தளமாக காணப்படுகின்றது. தனது சகல பங்கீட்டுபாட்டாளர்களுடன் உறுதியான தொடர்பு முறைகளை பேணுவதற்கு முயற்சிப்பதுடன் நிலைபேறான சக்தி அபிவிருத்திக்கு சாதகமான சுற்றாடலை பேணி வருகின்றது. ஒழுக்க ரீதியான தராதரங்கள் மற்றும் அரசாங்கம் மற்றும் சகல இலங்கையர்களது சிறப்பான நலனைப் பேணும் முகமாக அதிகாரசபையின் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தினால் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப சரியான வகிபாகங்கள், கட்டமைப்புக்கள், தகவல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப இந்த அர்ப்பணிப்புகளுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

## முகாமைத்துவ சபை

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகவும், பொறுப்புக் கூறக்கூடியதாகவும் முகாமைத்துவ சபை காணப்படுகின்றது. விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் மூலமாக இது முன்னெடுக்கப்படுகின்றது.

## பொறுப்பு

சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான இறுதி பொறுப்பினை சபை முகாமைத்துவம் ஏற்றுக் கொள்கின்றது. சட்டத்தின் மூலமாக சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்தல், உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான முறைகள் உரிய முறையில் செயற்படுத்தல், வழங்கப்பட்ட நிதி தொடர்பான தகவல்களின் நேர்மைத் தன்மை ஆகியவற்றுக்கும் பொறுப்பாக இது இருக்கின்றது. அதிகாரசபைக்கான அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் சபையின் பொதுவான பணிப்புரைகள் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ப இவரே பிரதான நிறைவேற்று அதிகாரியாக காணப்படுகின்றார். அதிகாரசபையின் நிதி சார்ந்த விடயங்களை மேற்பார்வை செய்வதற்கான உதவிகளை சபைக்கு அதன் உப குழு வழங்குகின்றது. இது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவாகும். சபையின் ஆற்றல்களுக்கு அப்பால் முக்கியமான தொழில்நுட்ப சிக்கல்கள் சார்ந்த விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அவசியம் ஏற்படுகின்ற பொழுது வெளிநிலை ஆலோசனை குழுக்கள் மூலம் சபைக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

அதிகாரசபையின் கொள்வனவு சார்ந்த சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு ஏற்ப மிகவும் கடினமாக மேற்கொள்ளப்படுகின்றன. கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற விடயத்தின் பெறுமதிக்கு ஏற்ப சுயாதீன தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்கள் மற்றும் கொள்வனவு குழுக்கள் ஆகியவற்றின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் இத்தகைய நடவடிக்கைகள் பொறுப்பேற்கப்படுகின்றன.

## ஆக்க அமைவு

சபையில் 21 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இவற்றுள் 12 பதவிநிலை உறுப்பினர்களும், தவிசாளர் உள்ளடங்கலாக 09 நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

## சபைக் கூட்டங்கள்

சபைக் கூட்டங்கள் தொடர்பில் முன்கூட்டியே அட்டவணைப்படுத்தப்படுகின்றன. ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு அமர்வு காணப்படுகின்றது. இந்த கூட்டங்களின் பொழுது சபையானது தனது உபாய ரீதியான அதிகாரசபையின் நெறிப்படுத்தல்களை நிர்ணயம் செய்கின்றது. அத்தோடு சகல செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றுகைகள் மற்றும் முன்னேற்றங்கள் ஆகியவற்றை மீள்பார்வைக்கு உட்படுத்துவதுடன் மீண்டுவரும் செலவினங்கள், மற்றும் மூலதனச் செலவு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன தொடர்பாகவும் மீளாய்வு செய்கின்றது. அதிகாரசபையின் அதிகாரிகள் அதிகாரசபையின் நோக்கங்களை அடைவதற்கான பிரேரணைகளை சபையின் பரிசீலனைக்காக சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பும் இங்கு வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் சபை உறுப்பினர்களுக்கு சம்பந்தப்பட்ட பொருத்தமான ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முகாமைத்துவ உறுப்பினர்கள் பங்குபற்றியமை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

| இல. | கூட்டம் நடைபெற்ற திகதி | பங்குபற்றுதல் |
|---|---|---|
| 1 | 11 பெப்ரவரி | 12 |
| 2 | 21 மே | 15 |
| 3 | 18 ஜூன் | 18 |
| 4 | 28 ஜூலை | 18 |
| 5 | 25 ஆகஸ்ட் | 17 |
| 6 | 22 செப்டெம்பர் | 16 |
| 7 | 30 நவம்பர் | 16 |
| 8 | 15 டிசெம்பர் | 16 |

## சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்

சட்டம் மற்றும் ஏற்புடைய விதிகள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டிகள் அவ்வப்போது அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இவை தொடர்பான விடயங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப அதிகாரசபை இணங்கி நடக்கின்றது என்பதை உறுதி செய்வதற்கான சகல முயற்சிகளும் முகாமைத்துவ சபை மேற்கொள்கின்றது. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அதிகாரசபையின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை சபை உறுதி செய்து கொள்கிறது

DRAFT 03
06.02.2023

# இடர் முகாமைத்துவம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) ஆனது சில பொதுவான இடர்கள் மற்றும் மேலதிக இடர்கள் ஆகியவற்றை இனம் கண்டது. இடர் முகாமைத்துவத்தை அங்கீகரிப்பதற்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் இவை குறிப்பிடத்தக்கதாகும். சிறந்த முகாமைத்துவம் மற்றும் ஆளுகை ஆகியவற்றின் முக்கிய அம்சங்களாக இவை காணப்படுகின்றன. இவை தொழிற்படுகின்ற சக்தி வினைத்திறன் மேம்பாடு மற்றும் புத்தாக்க சக்தி அபிவிருத்தி மற்றும் கொள்கை சார்ந்த சுற்றாடல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இந்த திட்டவட்டமான இடர்கள் பிரதானமாக காணப்படுகின்றன. ஆகவே காத்திரமான நிதி மற்றும் தொழிற்பாட்டு கட்டுப்பாட்டு முறையை நடைமுறையில் வைத்திருப்பதற்காக SLSEA இன் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கூட்டிணைந்து இடர் முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனத்தினை முகாமைத்துவ சபை மேற்கொண்டு வருகின்றது. அதிகாரசபையின் ஆணையை வழங்குவது தொடர்பிலான முறைகளின் வினைத்திறன் பற்றி அவ்வப்போது உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்கின்றது.

## இடர் கலாசாரம்

இடர் முகாமைத்துவம் தொடர்பில் முகாமைத்துவ சபையானது அதனது நிலை மற்றும் தெளிவான ஒத்த தன்மை ஆகியவற்றை இனங் கண்டுள்ளது. தீர்மானம் மேற்கொள்ளலின் பொழுது ஒழுக்கநெறி சார் கொள்கைகளை பிரதிபலிப்பது தொடர்பான அர்ப்பணிப்பை புலப்படுத்தும் முகமாக சகல பங்கீட்டுபாட்டாளர்களது நிலைமை பற்றி பரிசீலனை செய்கின்றது. தலைமைத்துவத்துடன் இணங்கி நடந்து கொள்ளும் முகமாக அத்தகைய ஒழுக்கநெறி கொள்கைகளின் முக்கியத்துவத்தை பணியாளர்கள் அங்கீகரித்துள்ளதுடன் இதனை தொடர்ச்சியாக பேணி வருகின்றனர்.

## இடர்களை இனங் காணல்

இடர்களை இனங் காண்பது தொடர்பான வெளிநிலை சுற்றாடலை அதிகாரசபையானது மிகவும் நெருக்கமாக கவனித்து வருகின்றது. இவ்வாறு இனங் காணப்பட்ட இடர்களை அதிகாரசபையானது மேலும் வகைப்படுத்தி வருகின்றது. வினைத்திறன்மிக்க கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக பூகோள சக்தி கைத்தொழிற்துறை தொடர்பில் சில பொதுவான மற்றும் நாட்டுக்கு திட்டவட்டமான சிலவற்றையும் அதிகாரசபை இனங் கண்டு வருகின்றது. 2019 இல் இனங் காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தேசிய சக்தி கொள்கை மற்றும் இலங்கைக்கான உபாய முறைகள் ஆகியவற்றுக்காக அதிகாரசபை தனது பங்களிப்புகளை வழங்கி வருகின்றது. குறிப்பிடப்பட்ட கொள்கைக்கு இணக்கமாக இவை காணப்படுவதுடன் இந்த நிகழ்ச்சி நிரல்களை தாக்குகின்ற கொள்கை சார் இடர்களை குறைத்து வருகின்றது.

## இடர் முகாமைத்துவம்

புத்தாக சக்தி வளங்கள் மற்றும் சக்தி வீணாவதை குறைத்தல் ஆகியவற்றை முக்கியமான ஆரம்பக் கட்ட விடயங்களாக அதிகாரசபை பரிசீலித்து வருகின்றது. அத்தோடு குறைவான எண்ணெய் சார் எரிபொருள் விலைகளை பிரதான இடர்களாக கருதுகின்றது. இவை மலிவான மாற்றீட்டு புத்தாக்க சக்திகளாக மாறலாம். சக்தி சார் செலவுகள் தொடர்பில் இறுதியில் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் இவை தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இறுதி பயன்பாட்டாளர் தொடர்பில் சக்தி வீணடிப்பிற்கு இவை இட்டுச் செல்லலாம்.

நிலைபேறான சக்தி சந்தையை ஆகக் குறைந்த செலவு நிலைமைக்கு மாற்றுவதற்காக நிலைபேறான சக்தி சந்தையை மாற்றுவதற்காக SLSEA ஆனது இடர் முகாமைத்துவ உபாயமுறையை மேற்கொண்டுள்ளது. குறைவான எண்ணெய் எரிபொருள் விலை நிலைமைகளின் கீழும் நிலைபேறான சக்தி தேவைகள் குறையாது. மின் பயன்பாடுகள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அணுகுமுறைகள் மூலமான புத்தாக்க சக்தியை அபிவிருத்தி செய்வதானது அபிவிருத்தி செய்வது தொடர்பில் பல்வேறு விதமான உதவிகளை SLSEA வழங்கியது. ஆற்றல்கள் சேர்க்கப்படுவதன் முக்கியத்துவத்தை இது உணர்ந்துள்ளது. கூரையில் சூரிய மின்கலங்களை பொருத்துவது தொடர்பான போட்டிகளை உற்சாகப்படுத்தும் முகமாக புதிதாக ஆரம்பிக்கின்ற பல பாரியளவிலான கம்பனிகள் முன்வந்து சேவை வழங்குவதை உற்சாகப்படுத்தும் முகமாக சூரிய மின்கல கைத்தொழிற்துறைகள் செழுமைபடுத்தப்பட்டது. மீண்டும் சூரிய மின் சக்தியை விலை சார்ந்த போட்டித்தன்மைமிக்கதாக இது மாற்றியது. இதன் அடிப்படையில் சக்தி சேவைகள் கம்பனிகளானது செழுமைப்படுத்தப்பட்டு அவற்றுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில் இத்தொழிற்துறைகளில் கம்பனிகளானது தொடர்ச்சியாக சேவையாற்ற முடிவதுடன் குறைவான மின் மற்றும் எரிபொருள் சார் விலைகள் காணப்பட்ட பொழுதிலும் கூட இந்த தொழிற்துறையானது சக்தி வினைத்திறன்மிக்க சேவைகளை விநியோகிப்பதற்கு ஆரம்பித்தது.

வாடிக்கையாளர்களுக்கான நிலையான கட்டணங்கள் மற்றும் அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் ஆகியவற்றின் காரணமாக மின்சார கைத்தொழில் துறைக்கு கணிசமான நட்டங்கள் ஏற்பட்டன. கடும் காற்றோட்ட நெருக்கடிகளை ஏற்படுத்தியது. முன் எப்போதும் இல்லாத இடர்களை இந்த துறை எதிர்கொள்வதற்கு இவை வழி வகுப்பதுடன் இத்தகைய விடயங்களின் காரணமாக புத்தாக்க சக்தி கைத்தொழில் துறையானது கடுமையாக பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

DRAFT 03
06.02.2023



## வளங்களை இழப்பதற்கான இடர்கள்

காணி பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் மனித செயற்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக நாட்டில் காணப்படுகின்ற பெறுமதியான புத்தாக்க சக்தி சார்ந்த வளங்கள் பாதகமாக பாதிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் விரிவாக்கம் பெற்றுவருவதன் காரணமாக காற்று சக்தி வளங்கள் தொடர்பான தளங்களில் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வந்த மின் உற்பத்தி சார் வளங்களானது மோசமான பெறுபேறுகளை காட்டியது. அதாவது நீரேந்து பிரதேசங்களில் ஏற்பட்ட காடழிப்பு இதற்கான முக்கிய காரணமாகும். மேலும் வர்த்தக ரீதியான பெருந்தோட்ட முறைகளை விரிவாக்கம் செய்தமை, மழைவீழ்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள், காலநிலை மாற்றத்தின் நேரடி தாக்கம் ஆகியன இவற்றிற்கான காரணிகளாகும். இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக சிவில் சமூக அமைப்புகள் பல்வேறு விதமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டன. புத்தாக்க சக்தி கருத்திட்ட அபிவிருத்திகளுக்கு எதிராக இவை பயன்படுத்தப்பட்டன. இத்தகைய கருத்திட்ட அபிவிருத்திகளுக்கு எதிராக பல்வேறு விதமான வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றுள் பதில் உரைப்பவர்களாக SLSEA குறிப்பிடப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 12 ஆக காணப்பட்டது. இதன் காரணமாக உற்பத்தி சார் புத்தாக்க சக்தி வளங்களில் இது தொடர்பான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கடும் கால தாமதம் ஏற்பட்டது.

## குறைந்த விலை சக்தி சேவைகள் தொடர்பான இடர்கள

2014 ஆம் ஆண்டில் மின்சாரத்தின் விலைகள் 25% இனால் குறைந்தமையின் காரணமாக சக்தி சேவை தொடர்பான கைத்தொழிற்துறை தொடர்ச்சியாக இவை பாதித்தது. நிறுவன ரீதியான பயன்பாட்டாளர்களின் ஆர்வம் தொடர்ச்சியாக குறைவடைந்தது. பகல் நேரத்தின் பொழுது கைத்தொழில் துறை சார்ந்த நிறுவனங்கள் மிக குறைவான கட்டணத்தையே செலுத்தின. உற்பத்தி செலவை குறைப்பதற்காக இவை மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக சக்தி சார்ந்த வீண் விரயத்தை குறைப்பதற்கான ஆர்வம் குறைவாகவே காணப்பட்டது. சக்தி வினைத்திறன்மிக்க சேவை துறைகளின் குறிப்பிடக்கூடியளவு சந்தை வாய்ப்புகள் சுருங்கி காணப்பட்டன. அதேவேளை கைத்தொழில் அனல் மின்சார பிரயோகங்களில் எண்ணெய் எரிபொருளை குறைவாகவே பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக பல்வேறு விதமான தாக்கங்கள் ஏற்பட்டன. அதேவேளை மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நிறுவக பயன்பாட்டாளர்கள் பாரிய அளவிலான சக்தி வினைத்திறன் மேம்பாட்டு கருத்திட்டங்களில் ஈடுபட்டதன் மூலம் தமது நிலைபேறான இலக்குகளை பின்பற்றி வந்தனர். இதன் காரணமாக காபன் வெளியிடல் சார்ந்த விடயங்கள் குறைக்கப்பட்டதுடன் குறைவான தொழிற்பாட்டு செலவுகளின் காரணமாக கணிசமான நன்மைகளை பெற்றனர்.

## இடர் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு

அதிகாரசபையின் இடர் முகாமைத்துவ அம்சங்கள் மற்றும் அதன் பிரசன்னம் ஆகியன கட்டுப்பாடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனம் காணும் நோக்கில் மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் காரணமாக அவசியமான உள்ளக மற்றும் வெளிநிலை மாற்றங்கள் தொடர்பான தேவைப்பாடுகள் பொறுப்பேற்கப்பட்டன. தற்சமயம் நடைபெற்று வருகின்ற கண்காணிப்பு செயற்பாடுகள் அல்லது தனிப்பட்ட மதிப்பீடுகள் ஆகியன தொடர்பான இறுதி பொறுப்புகள் ஆகியவற்றிற்கு சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பொறுப்பேற்கின்றது. அதேவேளை அதிகாரசபையின் மாறுபட்ட சேவை விநியோகம் தொடர்பிலான விடயங்களை கருத்திற் கொண்டு முறையை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுகளை அடிக்கடி உள்ளக கணக்காய்வாளர் மேற்கொண்டு வருகின்றார். இடர் முகாமைத்துவ செயன்முறைகள் தொடர்பான பயனுறுதித்தன்மை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்தோடு தற்போதைய செயன்முறைக்கு அவசியமான சீர் செய்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

DRAFT 03
06.02.2023

# செயலாற்றுகை மீளாய்வு

## 2020 ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் தொடர்பான செயலாற்றுகை

2019 ஆம் ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தேசிய சக்தி மற்றும் கொள்கை உபாயமுறைகளில் சக்தி பாதுகாப்பு மற்றும் நிலைபேறு தன்மை ஆகியவற்றுக்கு அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டது. இத்தகைய பின்புலத்தின் கீழ் நிலைபேறான வழிமுறைகள் மூலம் நம்பகமான, தாங்கக்கூடிய, தூய்மையான சக்தியை வழங்குவது முக்கியமான விடயமாக இனங் காணப்பட்டது. சம்பந்தப்பட்ட வருடத்திற்கான நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட சூழமைவின் கீழ் திட்டமிடப்பட்டன. அதேவேளை பூகோள பசுமை வாய்வு (புர்பு) வெளியிடல் குறைப்பு இலக்குகள் தொடர்பில் நாட்டின் பங்களிப்பு தொடர்பில் இதுவோர் முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது, இங்கு சக்தி துறையானது முக்கிய வகிபாகத்தை வகிப்பதுடன் நிலைபேறான சக்தி அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் நாடானது முக்கிய இடத்தை வழங்கியது, குறிப்பாக எதிர்வரும் தசாப்தங்களுக்காக இது மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிலைபேறான சக்தி தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து அதிக கவனம் கிடைக்கப் பெற்றதன் காரணமாக சக்தி துறை சார்ந்த செயற்பாடுகளின் பொழுது இவ்விடய பரப்பிற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களானது இத்தகைய சாதகமான பின்புலத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ்விடய பரப்புடன் தொடர்புடைய நேரடியான தேசிய நிறுவகம் என்ற முறையில் சம்பந்தப்பட்ட விடயப் பரப்புடன் நேரடியாக தொடர்புடைய பின்புலத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டிற்கான 35 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் நிகழ்ச்சிகளுக்கான வரைவுச் சட்டகம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன் புத்தாக்க சக்தி தொடர்பான சகல விடயங்களையும் அபிவிருத்தி செய்தல், சகல துறைகளிலும் சக்தி வினைத்திறனை மேம்படுத்தல், சக்தி நிலைபேறு தன்மைக்கு அவசியமான சகல கொள்கைகளையும் சாதகமாக உருவாக்குதல், சக்தி சார்ந்த தகவல்கள் முகாமைத்துவம் மற்றும் நிலைபேறான சக்தி துறையில் அவசியமான முதலீடுகளை உறுதிப்படுத்தல். இத்தகைய பரந்த சூழ்நிலையில் நிகழ்ச்சித்திட்டங்களானது ளுடுளுநுயு இனால் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான காலப் பகுதி வரை பின்வரும் மத்திய கால இலக்குகளுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- மத்திய மின்சார உற்பத்திக்காக புதிய 25% புத்தாக்க சக்தி பங்களிப்பினை வழங்குதல்
- கூரையில் பொருத்தப்படுகின்ற சூரிய சக்தி PV முறைகள் மூலம் 1000 மெகாவாட் ஆற்றலை அடைதல்
- 1500 GWh மின்சார சேமிப்பை அடைதல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களானது விநியோக பக்க முகாமைத்துவம் மற்றும் கேள்வி பக்க முகாமைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## (அ) விநியோக முகாமைத்துவம் (SSM)

### • புத்தாக்க சக்தி அபிவிருத்தி

நோக்கங்கள்: தேசிய புத்தாக்க சக்தி இலக்குகளை அடையும் முகமாக புத்தாக்க சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிகழ்ச்சிதிட்ட நடைமுறைப்படுத்தலில் நேரடியாக ஈடுபடல்.

### • உபாயம்

நோக்கங்கள்: பாரிய அளவிலான புத்தாக்க சக்தி கருத்திட்டங்களில் புத்தாக்க சக்தி அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் ஆரம்ப கருத்திட்ட அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றை மேற்கொள்ளல்.

## (ஆ) கேள்வி முகாமைத்துவம் (DSM)

### • சக்தி வினைத்திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு

முடிதநஉவளைந: வழ னசைநஉவடல ளைழெடளந ளை ளைஇடநஅநவெளைப நநெசபல அயயெபநஅநவெ ிசழபசயஅஅநள வழறயசனள யஉாநைஎளைப யெவழைழெயெட நநெசபல ளயஎளைப வயசபநவள

### • அறிவு முகாமைத்துவம்

நோக்கம்: சக்தி சார் சிந்தனையுடைய தேசமொன்றை உருவாக்கும் முகமாக சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

பொதுவான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக நிலைபேறான சக்தி அபிவிருத்தி தொடர்பில் எதிர்கால பயணத்திற்கு மிகவும் கவனத்தில் கொள்ளத்தக்க கொள்கை சார்ந்த முன்னெடுப்புகளுக்கான உதவிகளை SLSEA வழங்கியது. இந்த செயன்முறையானது மின்சக்தி அமைச்சு மற்றும் சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்வலு உற்பத்தி கருத்திட்டங்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் ஏனைய அரச துறை மற்றும் தனியார் துறையை உள்ளடக்கிய பல்வேறு விதமான பங்கீட்டுபாட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு சுற்றாடல் அமைச்சின் தலைமையின் கீழ் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன.

பிரதான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### அ. விநியோக பக்க முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

#### மீள்புத்தாக்க சக்தி பிரிவு

### • புத்தாக்க சக்தி கருத்திட்டங்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல்

புத்தாக்க சக்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான சக்தி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் ஏற்பாடு ஒப்புதல்கள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கான பொறுப்பினை ளுடுளுநுயு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை கருத்திட்ட ஒப்புதல் அளித்தல் குழுவின் கீழ் மேற்கொண்டு வருகின்றது. புத்தாக்க சக்தி கருத்திட்ட நடைமுறைப்படுத்தலுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் ஆராயப்படுகின்றன. அத்தோடு அவை மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்காக கருத்திட்ட ஒப்புதல் அளித்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இங்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒட்டுமொத்த கருத்திட்ட ஒப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளின் பொழுது ளுடுளுநுயு ஆனது முக்கிய வகிபாகத்தினை வகிக்கின்றது. ஏனைய கருத்திட்ட ஒப்புதல் அளித்தல் நிறுவனங்களுடன் சேர்த்து ீயுஊ கூட்டங்கள் மற்றும்

DRAFT 03
06.02.2023



மேன்முறையீட்டு குழுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடாத்துவதுடன் சக்தி அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துவதானது இவ்விடய பரப்பு தொடர்பில் ஒழுங்குபடுத்தல் செயன்முறைகள் பற்றி ளுடுளுநுயு மேற்கொள்கின்ற பிரதான செயற்பாடுகளாகும். ஒட்டுமொத்த செயன்முறைகளின் பொழுதும் அபிவிருத்தி செய்பவர்களுக்கும் இலகுபடுத்தல்களை ளுடுளுநுயு வழங்கி வருகின்றது. அத்தோடு கருத்திட்ட முன்னேற்றம் தொடர்பான செயன்முறைகளை மேற்பார்வை செய்தல், மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான நிலைமையை ஆராய்தல் ஆகியவற்றையும் இது மேற்கொண்டு வருகின்றது. இலங்கை மின்சார சபையினால் கேள்வி மனுக்கள் கோரப்பட்ட 1 மெகாவாட் சூரிய மின் திட்டங்கள், 10 மெகாவாட் சூரிய சக்தி கருத்திட்டங்கள், 10 மெகாவாட் காற்று மின் உற்பத்தி கருத்திட்டங்கள் ஆகியன இதன் கீழ் வருகின்றன. கடந்த காலம் முழுவதும் விண்ணப்ப பத்திரங்களை ஆராய்கின்ற செயன்முறைகளின் பொழுது சுமார் 700 மெகாவாட் மொத்த ஆற்றல் தொடர்பான விடயங்கள் தேசிய மின் உற்பத்தியுடன் இணைக்கப்பட்டதுடன் இவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- **காணியுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக அபிவிருத்தியாளர்களுக்கு உதவுதல்**



வவுனதீவு தளம்

1. வாழைச்சேனை 10 மெகாவாட் இலங்கை மின்சார சபை கேள்வி மனு வழங்கப்பட்ட சூரிய சக்தி கருத்திட்டம்: காணி மீள் அளவிடப்பட்டதுடன் புதிய இலக்கம் டீவு.்.மூடீ.்.2020.்.71 ஆனது மட்டக்களப்பு மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டது. புதிய காணியானது தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவக ரீதியான பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கப்பட்டது.
2. வவுனதீவு 10 மெகாவாட் மின்சார சபை விலை மனுக் கோரல் வழங்கப்பட்ட சூரிய சக்தி கருத்திட்டம்: காணி அமைச்சின் இறுதி ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்காக காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது.
3. Suntact MHP, பஹரந்த மற்றும் போஹில் MHP (L387/13) நாவலப்பிட்டிய தொடர்பான விடயம் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.
4. ரன்மது ஓய (MHP) காணி கையகப்படுத்தல் பூரணப்படுத்தப்பட்டது.
5. சிறி ஓய (MHP) காணி குத்தகை உடன்படிக்கையை தயார் செய்வதற்காக இரத்தினபுரி மதிப்பீட்டு திணைக்கள அலுவலகத்திடமிருந்து சிறி ஓய ஆரீ தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டது.
6. சென். ஹெலியர்ஸ் ஆரீ: வலய கையகப்படுத்தல் பிரேரணைகளுக்காக பிரிவு 50 இனை வழங்கும் முகமாக மின்சக்தி அமைச்சின் விதப்புரைகளை காணி அமைச்சு கோரியிருந்தது.

- **சூரிய பல சங்கிரமய**

கூரையில் சூரிய மின் கல தொகுதிகளை பொருத்தி நடைமுறைப்படுத்துவது தொடர்பான முக்கிய கருத்திட்டமான சூரிய பல சங்கிரமய 3 திட்டங்களின் கீழ் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அவையாவன, தேறிய மின் மானி, தேறிய கணக்கீடு, மற்றும் தேறிய சக ஆகும். இவை இலங்கை மின்சார சபை, லங்கா இலக்ட்ரிசிடி பிரைவட் லிமிடட் ஆகியவற்றுடன் கூட்டிணைந்து மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்திட்டமானது வீடுகள், சமய நிறுவனங்கள், ஹோட்டல்கள், வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் துறைகள் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் 337 மெகாவாட் சூரிய மின் கல ஆற்றல்களை பெற்றுக் கொள்வதற்கு உதவப்பட்டது. இது தேசிய மின்சக்தி தேவையின் 3மூ இற்கு நிகரானதாகும். 31,165 கூரையில் பொருத்தப்பட்ட சூரிய ீஏ முறைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

SLSEA இன் கீழ் பதிவு செய்யப்பட்ட சூரிய கல மின்சக்திகளை வழங்கும் நிறுவனங்களின் கீழ் இந்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உற்பத்திப் பொருட்களின் தன்மையை மற்றும் தன்மையை உறுதிப்படுத்தல், தராதரம் மிக்க முறையில் பொருத்துதல்கள் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்தல் ஆகியன SLSEA இன் நேரடி கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான SLSEA இன் இடையீடுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

- பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், பொருத்துகின்ற பணியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- சூரிய சக்தி கூரை சேவை வழங்குநர்களின் செயலாற்றுகை சோதனையை நடாத்துதல்
- உபகரணங்களை இறக்குமதி செய்து சூரிய சக்தி முறைகளை கூரையில் பொருத்துவதற்கான உபகரண இறக்குமதிகளை அங்கீகரிப்பதற்கான ஒப்புதல் அளிக்கும் குழுக் கூட்டங்களை நடாத்துதல்
- ஏனைய ஒப்புதல் அளிக்கும் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து செயற்படுதல்.
- தரவு - தகவல் முறைகளை இற்றைப்படுத்தி பேணுதல்
- கூரையில் பொருத்துகின்ற சூரிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல
- கூரையில் சூரிய மின் கலங்களை பொருத்துகின்ற சேவை வழங்குநர்களின் செயலாற்றுகையின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்த்தல்
- வாடிக்கையாளர் பராமரிப்பு சேவைகளை நடாத்துதல்
- NVQ மாணவர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தராதரங்களை இற்றைப்படுத்துதல்

DRAFT 03
06.02.2023

# செயலாற்றுகை மீளாய்வு

## • சூரிய மின்சக்தி சேவை வழங்குநர்களை பதிவு செய்தல

புதிய பதிவுகளை எதிர்பார்க்கின்ற கம்பனிகளானது தமது கம்பனி தொடர்பான பின்புலம், தொழில்நுட்ப பணியாளர்கள் பற்றிய விபரம், அவர்களது தகைமைகள், இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற கருவிகள் (இன்வேர்டர்ஸ் மற்றும் பெனல்) ஆகியவற்றை தெரிவித்தல் வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு குழுவானது இவர்களது தகைமை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதுடன் பதிவிற்கான ஒப்புதல்களை வழங்குகின்றது. நீடிப்பதற்கு விரும்புபவர்கள் அவர்கள் மேற்கொள்கின்ற பொருத்துதல்களை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பணம் ஒன்றினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த சமர்ப்பணத்தின் பொழுது விண்ணப்பப் படிவங்களை வழமையாக மேற்கொள்ளப்படுகின்ற முறை சார்ந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக அவர்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளின் தன்மைகளை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களையும் குழு உறுப்பினர்கள் வழங்குவார்கள். உற்பத்திப் பொருட்கள் மற்றும் பொருத்துதல்கள் ஆகியவற்றின் தராதரங்கள் இணங்கி நடத்தல், பதிவு மற்றும் புதுப்பித்தல் செயன்முறைகளின் பிரயோகிக்கப்படுகின்ற முக்கிய நெறிமுறையாகும்.

2020 மத்திய காலப் பகுதி வரை SLSEA இல் 270 சூரிய மின்சக்தி சேவை வழங்குநர்கள் தம்மை பதிவு செய்துள்ளனர், இதன் அடிப்படையில் பல்வேறு ஆற்றல்களின் கீழ் 8,500 நேரடி வேலை வாய்ப்புகள் மற்றும் 3,700 மறைமுக வேலை வாய்ப்புகள் ஆகியவற்றை இது ஏற்படுத்தியது.

## • பாதுகாப்பு படையினருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள

அடிக்கடி இடையீடுகளை மேற்கொள்ளும் முகமாக SLSEA பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பொழுது பெண்களை பயிற்றுவிப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. சக்தி சேவை வழங்குநர்கள் என்ற முறையிலே பெண்களுக்கான வாய்ப்புகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இவர்களது ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. SLSEA ஆனது பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிப்பதற்கான 05 நாள் பூரணத்துவமிக்க செயலமர்வொன்றினை மேற்கொண்டது. பாதுகாப்பு அமைச்சுடன் கூட்டிணைந்து இலங்கை இராணுவப் படையைச் சேர்ந்த பெண்களது ஆற்றல்களை விருத்தி செய்யும் முகமாக சூரிய சக்தி மையமாகக் கொண்ட செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படை, சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த 21 பெண் அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினர் பங்குபற்றினர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பொழுது விரிவுரைகள் சூரிய சக்தி தள நிலையங்களுக்கு சென்று விஜயங்களை மேற்கொண்டு அவதானித்தல், கேபிள் உற்பத்தி பொறித்தொகுதிகள் மற்றும் சூரிய சக்தி பூங்காக்களில் நேரடியான நடைமுறை பயிற்சிகள் ஆகியன 2020 ஆகஸ்ட் 18 முதல் 22 வரையிலான காலப் பகுதியில் ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்றது.







இலங்கை பொலிஸாருக்கான பயிற்சிகளும் நடைபெற்றன. இவை மிரிஹானையில் உள்ள பொலிஸ் தொடர்பாடல் பிரிவில் இடம்பெற்றது.

## • சூரிய சக்தி PV தொழில்நுட்பம் தொடர்பில் NAITA மாணவர்களுக்கான பயிற்சி

சூரிய சக்தி உற்பத்தி கருத்திட்டத்தின் ஓர் அங்கமாக சூரிய சக்தி PV தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி யேஜவுயு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த பயிற்சியினை திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, ஆய்வு மற்றும் புத்தாக்க அமைச்சு நடாத்தியது.



DRAFT 03
06.02.2023



### கருத்திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று திறன் விருத்தி தொழிற்பயிற்சி கல்வி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சில் இடம்பெற்றது

05 மாத கால கோட்பாடு தொடர்பான கற்கைநெறியினை NAITA இல் வெற்றிகரமாக பூரணப்படுத்தியவர்களுக்கான உயர்தர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஹம்பாந்தோட்டை சூரிய சக்தி பூங்காவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### • புத்தாக்க சக்தி பொறித்தொகுதி விளக்கமளித்தல் நிகழ்வு

ஹம்பாந்தோட்டை சூரிய சக்தி பொறித்தொகுதி மற்றும் இங்குரான சிறிய நீர் மின் வலு பொறித்தொகுதி ஆகியன தொழிற்பட்டு வருகின்றன. சூரிய மின் சக்தி முறை தொடர்பான பேணுதல் செயற்பாடுகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஹம்பாந்தோட்டை மின்வலு பொறித் தொகுதிகளில் யானைகளின் அத்துமீறிய பிரவேசம் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியதாக அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக மின் வேலிகளை திருத்துவதற்கான பணிகள் இடம்பெற்றன. இங்குரானவில் காணப்படும் காற்றாளி தொடர்பான நூதனசாலையை விரிவாக்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### கள பணியாளர்களினால் பெனல்களை கழுவுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன





### கவர்னர் பகுதி (A Gover nor part)



### பிளைய் சக்கர பகுதிகள் (Flywheel Parts)



### உபாய ரீதியான பிரிவு

### • புத்தாக்க சக்தி அபிவிருத்தி திட்டம்

நிலைபேறான சக்தி அபிவிருத்தி செயன்முறையின் பொழுது, புத்தாக்க சக்தி அபிவிருத்தி தேவைகளானது இயற்கையை சுமுகமாக பயன்படுத்தக்கூடிய விதத்தில் உச்ச அணுகுமுறையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய சூழமைவில் நீண்ட கால புத்தாக்க சக்தி அபிவிருத்தி செயன்முறைகள் பரிசீலிக்கப்படல் வேண்டும். புத்தாக்க சக்தி கருத்திட்டங்கள் தொடர்பில் பாரிய அளவிலான புத்தாக்க சக்தி கருத்திட்டங்கள் தொடர்பில் பொருத்தமான தளங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். புத்தாக்க சக்தி அபிவிருத்தியின் பொருத்தமான இடங்களை தெரிவு செய்வதற்காக கடந்த காலங்களில் பரந்த அளவில் புவியியல் தகவல் முறைமை (GIS) பிரயோகிக்கப்பட்டது. பூகோள இடம் சார்ந்த தகவல்களை புத்தாக்க சக்தி அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளலின் பொழுது பிரயோகிப்பதற்கு அவற்றை பாரியளவில் ஒருங்கிணைப்பதற்கான தகவல்களை GIS வழங்குகின்றது. மாறுபட்ட காணி பயன்பாட்டு நெறிமுறை, பயன்படுத்தி புத்தாக்க சக்தி அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணிகளை பெற்றுக் கொள்வது

DRAFT 03
06.02.2023

# செயலாற்றுகை மீளாய்வு

தொடர்பிலான பல்வேறு அம்சங்கள் ஆராயப்பட்டு சூரிய, காற்று, காணி பயன்பாட்டு விடயங்களுடன் தொடர்புடையவைகள் பெறப்பட்டு புத்தாக்க சக்தி வளங்களுக்காக அபிவிருத்தி செய்வதற்காக உச்ச காணிகள் பயன்படுத்தப்படுகின்றன. நுசு பொறித் தொகுதி இடங்கள் தொடர்பான மாதிரி தெரிவிற்கான நெறிமுறைகள் சுரு பொறித் தொகுதி இடங்களுக்கான பொருத்தப்பாடுகள் ஆகியன வளம்மிக்கதாகவும், காணி பயன்பாடு, வீதிகளுக்கான தூரம், உற்பத்தியுடன் தொடர்புடைய நிலையத்திற்கிடையிலான தூரம், நகர நிலையங்கள் மற்றும் விடுபட்ட பிரதேசங்கள் ஆகியன இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றன (உம்: வன மற்றும் வன சீவராசிகள் காணப்படுகின்ற பிரதேசங்கள், தொல்பொருள் ஒதுக்கங்கள், கரையோர பாதுகாப்பு பிரதேசங்கள், நகர் பிரதேசங்கள், விமான நிலையங்கள், வீதிகள் போன்றன).

- புத்தாக்க சக்தி அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டு காணி பயன்பாட்டு வகைகள

### • சியம்பலாண்டுவ 100 மெகாவாட் சூரிய மின் சக்தி பூங்கா

நாட்டின் முதலாவது மிகப் பெரிய சூரிய சக்தி பூங்காவான 100 மெகாவாட் சூரிய சக்தி பூங்கா தொடர்பான வேலைகளின் ஆரம்ப கட்ட அபிவிருத்தி வேலைகள் சியம்பலாண்டுவவில் மேற்கொள்ளப்பட்டன. இந்த கருத்திட்டத்திற்கு அவசியமான சகல ஒப்புதல்களும் பெறப்பட்டன, மேலும் கருத்திட்ட களத்தில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பணிகளும் பூரணப்படுத்தப்பட்டது. அத்தோடு நிலை மாற்று வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. எதிர்கால கருத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடும் முகமாக வன திணைக்களம், சியம்பலாண்டுவ பிரதேச செயலகம், இலங்கை மின்சார சபை, ஏனைய சகல பங்கீட்டுபாட்டாளர்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. துரித இடையீடுகளின் மூலம் காணியை பெற்றுக் கொள்வது உள்ளடங்கலாக கருத்திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




### • பூனேரியன் காற்று-சூரிய கலப்பு சக்தி பூங்கா

நாட்டில் காற்றாளை சக்தியை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புள்ள பாரிய பிரதேசங்களுள் ஒன்றாக பூனேரியன் பகுதி காணப்படுகின்றது, அத்துடன் சூரிய சக்தி வளங்களுக்கான ஆற்றல்களும் இங்கு அதிகமாக காணப்படுகின்றது. இங்கு கைவிடப்பட்ட நிலங்களும் விவசாயத்திற்கு பயன்படாத நிலங்களும் காணப்படுவதன் காரணமாக புத்தாக்க சக்தி அபிவிருத்தி தொடர்பில் சாதகமான இடங்கள் காணப்படுகின்றன. பூனேரியன் பிரதேசமானது பாரிய அளவிலான காற்று-சூரிய கலப்பு புத்தாக்க சக்தி திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்டது. இக்கருத்திட்டம் தொடர்பில் மொத்தமாக மதிப்பிடப்பட்ட ஆற்றல்கள் காற்று மின் சக்திக்காக 239 மெகாவாட் மற்றும் சூரிய மின் சக்திக்காக 150 மெகாவாட் ஆகும். மொத்த கருத்திட்டமானது 1170 ஹெக்டெயரில் காணப்படுகின்றது. இக்கருத்திட்டம் தொடர்பான ஆரம்பக் கட்ட நில அளத்தல் பணிகள் காணி அளத்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் காணி கையகப்படுத்தலுடன் தொடர்புடைய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டது. காற்றாளை மின்சாரத்துடன் தொடர்புடைய முக்கிய விடயங்களுள் ஒன்றாக பறவைகள் ஆய்வு காணப்படுகின்றது. இதுவும் மேற்கொள்ளப்பட்டது. சுற்றாடல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடுகளை (நுளுஐயு) மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

### • மன்னார் II ஆம் கட்ட 100 மெகாவாட் காற்று மின்சார பூங்கா

மன்னாரில் எஞ்சிய காற்றாளை மின் உற்பத்தி தொடர்பான செயன்முறைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் உள்ள மிகச் சிறந்த காற்றாளை வளங்கள் இங்கு காணப்படுகின்றன. இதன் முதலாவது 100 மெகாவாட் மின் உற்பத்தி திட்டமானது இலங்கை மின்சார சபையினால் விருத்தி செய்யப்பட்டது. தற்போது காணப்படுகின்ற ஆற்றல்களை கண்டறிவதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுகளின் பொழுது 150 மெகாவாட் காற்றாளை மின் சக்தி ஆற்றல்கள் மன்னார் தீவில் காணப்படுவதாகவும் மற்றும் 290 மெகாவாட் மின் ஆற்றல்கள் மன்னார் மாவட்டத்தில் காணப்படுவதாகவும் அடையாளம் காணப்பட்டன. மேலும் மன்னார் தீவில் மற்றுமொரு 100 மெகாவாட் காற்று மின் சக்தி விருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப கட்ட சாத்தியப்பாட்டு ஆய்வு, ESIA, காற்றை அளவிடுவதற்கான செயன்முறைகள், கருத்திட்டத்திற்கான காணியை கையகப்படுத்தும் செயன்முறைகள் ஆகியன முன்னெடுக்கப்பட்டன.

## ஆ. கேள்வி பக்க முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்

தற்போது காணப்படுகின்ற தொண்டர் அடிப்படையிலான அனுகுமுறையிலிருந்து அவதானம் செலுத்தப்பட்ட கட்டாய அனுகுமுறைக்கு சக்தி வினைத்திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை (EEI&C) உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நெறிப்படுத்தலின் முதல் படிமுறையாக சில இறுதி பயன்பாட்டு பாவனையாளர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக ஒழுங்குவிதியோடு வரையப்பட்டது. இந்த வகையில் உள்ள எஞ்சிய இறுதிப் பயன்பாட்டாளர்களிடமிருந்து தமது சக்தி மட்ட செயலாற்றுகைகளை இறுதி பயன்பாட்டு குழுக்கள் புரிந்து கொள்வதை இந்த ஒழுங்குவிதி இயலுமையாக்குகின்றது. இதன் காரணமாக அவர்களது சக்தி சார்ந்த செயலாற்றுகைகள் மேம்படுத்தப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில் இந்த சட்டவாக்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது துரிதமாக கட்டாய அறிக்கையிடல் பிரிவிற்கு சக்தி குறிகாட்டிகளை இட்டுச் செல்வதுடன் குறிப்பிட்ட இறுதி பயன்பாட்டாளர் தொடர்பான வெளியீட்டு மட்டங்களை புலப்படுத்துகின்றது. அடுத்த படிமுறையாக குறைவாக செயலாற்றுகின்ற இறுதி பயன்பாட்டாளர்கள் தமது சம்பந்தப்பட்ட வசதிகள் தொடர்பில் பூரணத்துவமிக்க சக்தி கணக்காய்வொன்றினை பொறுப்பேற்பதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன் இதனை மேம்படுத்துவதற்காக திட்டம் ஒன்றினையும் உருவாக்குதல் வேண்டும். இதன் காரணமாக நாட்டின் நுநுஐ மற்றும் ஊ பிராந்திய கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

### • சக்தி வினைத்திறன் மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு

நோக்கம்: தேசிய சக்தி வினைத்திறன் இலக்குகளை அடையும் முகமாக சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் நேரடியாக ஈடுபடல்.

DRAFT 03
06.02.2023



சக்தி பாதுகாப்பு விடயங்களை பொறுத்தவரையில் பின்வரும் வகைகளின் கீழ் வர்த்தகம், கைத்தொழில், உள்நாட்டுத் துறைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

- ஒழுங்குபடுத்தல் இடையீடுகள்
- சக்தி வினைத்திறன் சேவைகளை வலுப்படுத்தல்
- பயிற்சி மற்றும் விழிப்பூட்டல்

2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன..

## 1. சக்தி முகாமைத்துவ முறைகளை தாபித்தல்

சக்தி முகாமையாளர் நிகழ்ச்சித்திட்டம், சக்தி கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், சக்தி நுகர்வு முக்கிய விடயங்களை தாபித்தல் போன்றவற்றின் மூலம் வர்த்தக மற்றும் கைத்தொழிற்துறைகளில் சக்தியை பாதுகாப்பதற்கான இலகுபடுத்தல்களை SLSEA மேற்கொண்டு வருகின்றது. தற்சமயம் 2026 சக்தி முகாமையாளர்கள் மற்றும் 22 சக்தி கணக்காய்வாளர்கள் ஆகியோர் SLSEA உடன் தம்மை பதிவு செய்துள்ளனர். இதற்கும் மேலதிகமாக சக்தி பாதுகாப்பு மற்றும் புத்தாக்க சக்தி தொடர்பான சக்தி முகாமைத்துவ அதிகாரிகளுக்கான செயலமர்வுகள் 2018 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்கு அமைவாக 2020 ஆம் ஆண்டில் மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் (100 பங்குபற்றுநர்கள்) செயலமர்வு நடாத்தப்பட்டது. சக்தி முகாமையாளர்கள் / சக்தி கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சிகளை வழங்குபவர்கள் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அத்தோடு சக்தி முக்கியத்துவ ஒழுங்குவிதிகள் தொடர்பான விடயங்களை பிரசுரிப்பது கட்டாயமான சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமாக உள்ளடக்குவதற்கான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 2. தராதரங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்தல்

கைத்தொழில் துறைகளில் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு திட்டங்களை முகாமைத்துவம் செய்வதற்கான விழிப்பூட்டல்களை ஏற்படுத்தல், உள்நாட்டு மற்றும் வர்த்தக துறைகளில் விழிப்பூட்டல்களை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்காக முறையான ஒழுங்குபடுத்தல் இடையீடுகளை உருவாக்கும் முகமாக SLSEA இனால் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் சக்தி வினைதிறன் சார் விடயங்களை கட்டியெழுப்புதல் 2020 இற்கான நடைமுறை கோவை இறுதிப்படுத்தப்பட்டதுடன் பொதுமக்களது கருத்தை தெரிவிக்கும் முகமாக வைக்கப்பட்டுள்ளது. வர்த்தக கட்டிட துறைகளில் சக்தி பாவனை வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் வர்த்தக கட்டிடங்களுக்கு கட்டாயமான தேவைப்பாடாக இந்த கோவை அறிமுகப்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்ட நிலைபேறான சக்தி வீடுகளுக்கான வழிகாட்டியானது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வருகின்றது. சக்தி தரநிலை பிரயோக நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு காணப்படுகின்றது

| விளக்கம் | முன்னேற்றம் |
|---|---|
| LED பெனல்களுக்கான ஆகக் குறைந்த சக்தி செயலாற்றுகை தராதரம் | தராதரங்களை நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. |
| கூரை மின் விசிறிகளுக்கான சக்தி சிட்டை ஒட்டுதல் நிகழ்ச்சித்திட்டம் | 1400 மிமீ விட்டமுடைய கூரை மின் விசிறிகளுக்கான சக்தி சிட்டையொட்டுதல் தொடர்பான பொது மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் ஊடகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.<br><br>ஏனைய விட்டங்களையுடைய கூரை மின் விசிறிகளுக்கு சக்தி தரநிலை நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாக்குவதற்கான பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை முதல் படிமுறையாக 1200 மிமீ விட்டமுடைய கூரை மின் விசிறிகளுக்காக முதல் படிமுறை மேற்கொள்ளப்பட்டது. |
| குளிர் சாதனப் பெட்டிகளுக்கு சக்தி தரநிலை ஒட்டுதல் நிகழ்ச்சித்திட்டம் | குளிர் சாதனப் பெட்டிகள் தொடர்பான நகல் வரைவு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை தராதரத்தில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| LED விளக்குகளுக்கான சக்தி சிட்டையிடல் நிகழ்ச்சித்திட்டம் | LED விளக்குகளுக்கு கட்டாயமாக சக்தி சிட்டையை ஒட்டுதல் தொடர்பான விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது |
| தொலைக்காட்சி, ரய்ஸ் குகர், நீர் பம்ப்பி போன்றவற்றுக்கு சக்தி தரநிலை ஒட்டும் நிகழ்ச்சித்திட்டம் | தொலைக்காட்சி, ரய்ஸ் குகர், நீர் பம்ப்பி ஆகியவற்றுக்கு சிட்டை தராதரங்களை தயாரித்தல் முன்னெடுக்கப்பட்டது. |

## 3. அறிவுரை மற்றும் ஆலோசனை சேவைகள்

கைத்தொழிற் துறைகள், வர்த்தக மற்றும் அரச துறை நிறுவனங்கள் தமது சக்தி சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக SLSEA உதவி வருகின்றது. இதற்காக அவர்களது கேள்விகளுக்கு பதிலளித்தல். மேலும் கோரிக்கையின் பிரகாரம் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது. சக்தி கணக்காய்வு செயற்பாடுகளை பயன்படுத்துவதற்காக வாடகைக்கு பெறகூடிய விதத்தில் நன்கு பேணப்பட்ட கருவி வங்கியொன்று காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் கருவி பயன்பாட்டிற்கான கால எல்லை சுமார் 900 நாட்கள் மற்றும் அல்ட்ரா சொனிக் மானி, GS வாயு பகுப்பாய்வு, தர்மல் இமேஜிங் கெமரா, காற்று போக்கு மானி, நீராவி சோதனை கருவி ஆகியன கருவி வங்கிக்காக முன்னெடுக்கப்பட்டன. சக்தி சார்ந்த கணக்காய்வுகள் மற்றும் சக்தி வினைத்திறன்மிக்க மேம்பாட்டு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை வழங்குவதற்காக சக்தி சேவை கம்பனிகள் (ESCO) பதிவு செய்யப்பட்டன. இவை SLSEA இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. தற்சமயம் SLSEA இன் கீழ் சுமார் 50 சக்தி சேவை (ESCO) க்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டில் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களம், சுகததாஸ விளையாட்டுத் தொகுதி, நிதி ஆணைக்குழு, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம், SLIDA ஆகியவற்றுக்கு மேலதிக கலந்தாலோசனைகள் மற்றும் சக்தி கணக்காய்வு சேவைகள் ஆகியன வழங்கப்பட்டன.

DRAFT 03
06.02.2023

# செயலாற்றுகை மீளாய்வு

### 4. சக்தி சமநிலை

இலங்கை சக்தி சமநிலையானது இலங்கையில் சக்தி துறை செயலாற்றுகை தொடர்பான பகுப்பாய்வாகும். SLSEA ஆனது சக்தி சமநிலையை வருடாந்தம் வெளியிடுவதுடன் 2008 ஆம் ஆண்டிற்கான சக்தி சமநிலையை தொகுத்து வடிவமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக இணையத்தை மையமாகக் கொண்ட தேசிய சக்தி மையம் தொடர்பான தரவு மைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு சக்தி மைய தரவு மையத்தை விருத்தி செய்வதற்கான தயார் நிலைகளுக்கான விலை மனுக் கோரல்கள் இடம்பெற்று வருகின்றன.

### 5. முன்னோடு கருத்திட்டங்களை தாபித்தல்

மூன்று உற்பத்தி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குளிர்மைபடுத்தல், வெப்பம் மற்றும் சக்தி (CCHP) ஆனது சமகாலத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்து மற்றும் சக்தி மூலத்திலிருந்து பயன் தரக்கூடிய விதத்தில் வெப்பமேற்றுதல் மற்றும் குளிர்மைபடுத்துவதை உள்ளடக்குவதாகும். ஆரம்பக் கட்ட எரிபொருளிலிருந்து 80% ஆன சக்தி முப்பரிமாண உற்பத்திகளுக்காக பயன்படுத்த முடியும். சக்தியை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான முறைகளுள் இதுவோர் சிறப்பான முறையாகும். இத்தகைய சூழலில் கைத்தொழில் துறைகளுக்கு முப்பரிமாண சக்தியை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி ஆராய்வதற்கு SLSEA தீர்மானித்தது. முப்பரிமாண உற்பத்தி முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்கள் பியகம ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் பூரணப்படுத்தப்பட்டது மற்றும் இது சம்பந்தமான சாத்தியப்பாடு ஆய்வொன்று முதலீட்டுச் சபை அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பியகம ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் சில தொழிற்சாலைகள் தெரிவு செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

### 6. தொழிற்பாட்டு கேள்வி பக்க முகாமைத்துவ

பின்வரும் நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ழுனுளுஆ நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உந்துதல் பிரதேசம் | மேற்கொள்ளப்பட்ட வேலைகள் |
|---|---|
| வினைத்திறன்மிக்க குளிரூட்டிகள் | குளிரூட்டிகளை பரிசோதனை செய்யும் ஆய்வு கூட்டம் வடிவமைத்தல் மற்றும் நிதியிடல் தொடர்பான பிரேரணை சோதனை வசதிகள் தயார் செய்யப்பட்டதுடன் பல்வேறு வகையான நன்கொடை அமைப்புகளுக்கு சமர்ப்பிக்கப்படடது<br><br>பிரேரணைகளானது ஒப்புதலுக்கு ERD இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| வினைத்திறன் மிக்க குளிர்சாதனப் பெட்டி | குளிர்சாதனப் பெட்டி பிரதியீடு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னோடி ஆய்விற்காக குளிர் சாதனப் பெட்டி சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| வினைத்திறன்மிக்க குளிரூட்டிகள் (chillers) | குளிரூட்டிகள் ஆய்விற்கான செயலாற்றுகை நியதி தயாரிக்கப்பட்டுள்ளது |
| வினைத்திறன்மிக்க மின் விசிறிகள் | வீட்டு பொருட்களுக்கான உபகரண ஆய்வின் தரவு பெறுமதி பூரணப்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளை சனத்தொகை மற்றும் புள்ளவிபரவியல் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன |
| ஸ்மார்ட் வீடுகள் | சக்தி வினைத்திறன் நடைமுறைகள் வீடுகளில் எவ்வாறு பிரயோகிப்பது தொடர்பான புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. |
| ஒளிரும் மின்விளக்குகளை இல்லாதொழித்தல் | LED மின் விளக்குகளை விநியோகிப்பதற்கான முதலாவது கட்டம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. |

### அறிவு முகாமைத்துவம்

- **சக்தி கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

பெருந்தொற்றின் காரணமாக சக்தி கழக மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- கல்வி அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம் சக்தி கழக ஆசிரிய பொறுப்பாளர்களுக்கான ஒன்லைன் மூலமான அறிவுப் பகிர்தல் நிகழ்ச்சித்திட்டமானது விருத்தி செய்யப்படும்.
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான நகல் செயற்பாட்டு வழிகாட்டி பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- கட்புல கற்றல் சாதனங்களை விருத்தி செய்வதற்கான கொள்வனவு செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- **சன்ரக்ஷாவை வெளியிடல்**

மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு தனித்துவமான அறிவை வழங்கும் முகமாக சன்ரக்ஷ என்ற காலாண்டு கல்வி சஞ்சிகையை SLSEA வெளியிடுகிறது. மூன்றாம் காலாண்டுக்கான ஐநளமவழி வெளியீட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. கடைசி இரண்டும் விநியோகிக்கப்பட்டுள்ளது

- **முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி**

- பயிற்சி பொருட்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.
- பெருந்தொற்றின் காரணமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பிற்போடப்பட்டது.

- **சாரணர் நிகழ்ச்சித்திட்டம்**

சக்தி முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒரு இலட்சம் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதற்கு சாரணர் அமைப்பும் SLSEA உம் திட்டமிட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரத்திற்கான சித்திர வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் பெருந்தொற்றின் காரணமாக இதனை விநியோகிக்கின்ற வேலைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

- **சக்தி சிட்டையிடல் மேம்பாடு**

சிவிலிங் மின்விசிறிகளுக்கு சிட்டை ஒட்டுகின்ற விடயமானது சகல அரசாங்க ஊடகங்களுடனும் கூட்டிணைந்து மேற்கொள்ளப்பட்டது

- **வாசிப்பு சாதனங்களை அச்சிடல்**

முறையான வெளியீடுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்கால தேவைகளை அடிப்படையாகக் கொண்டு இவை அச்சிடப்படும்.

- **ஊடக உபாய ரீதியான திட்டம்**

பூரணத்துவமிக்க ஊடக உபாய ரீதியான திட்டத்திற்கான செயலாற்றுகை நியதிகள் விருத்தி செய்யப்பட்டன.

# செயல்திட்டம் 2021

DRAFT 03
06.02.2023



## செயல்திட்டம் 2021

### விநியோக பக்க முகாமைத்துவ (SSM) நிகழ்ச்சித்திட்டங்கள்

### புத்தாக்க சக்தி பிரிவு

#### RE 01 - வள ஒதுக்கீடு

எதிர்கால அபிவிருத்தியாளர்களுக்கான புத்தாக்க சக்தி வள ஒதுக்கீடானது காணி தொடர்பான விடயங்கள் மற்றும் ஏனைய அவசியமான இடையீடுகள் ஆகியவற்றை இலகுபடுத்தி அவற்றுடன் வழங்கப்படும்.

#### RE 02 - புத்தாக்க சக்தி கருத்திட்ட மேற்பார்வை

கருத்திட்ட நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் தொடர்பான மேற்பார்வையானது அதனோடு தொடர்புடைய மதிப்பீடுகளுடன் மேற்கொள்ளப்படும்.

#### RE 03 - புத்தாக்க சக்தி முன்னோடி கருத்திட்டங்கள

மாறுபட்ட புதிய தொழில்நுட்பங்களுக்காக இயலுமையுடைய சுற்றாடல்களை தோற்றுவிக்கும் முகமாக புத்தாக்க சக்தி முன்னோடி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இதன் கீழ் மிதக்கின்ற சூரிய சக்தி முன்னோடித் திட்டம், ஐதரசன் தொழில்நுட்பம் அதாவது காற்றுடனான ஐதரசன் தொழில்நுட்பம், சூரிய சக்தி மற்றும் உயிர் வாயு கலப்பு ஆகியன திட்டமிடப்பட்டுள்ளது.

#### RE 04 - புத்தாக்க சக்தி சேவைகள

2028 ஆம் ஆண்டில் கூரையில் பொருத்தப்படுகின்ற சூரிய மின்கலம் மூலம் 1000 மெகாவாட் இலக்கை அடைவதற்காக, சூரிய வள சங்கிரமய கருத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதனை வலுப்படுத்துவதற்கு அவசியமான இடையீடுகள் அறிமுகப்படுத்தப்படும். தன்மை தராதரங்கள் மற்றும் முறைகளின் செயலாற்றுகை ஆகியவற்றை உறுதி செய்வதற்கு அவசியமான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூரையில் பொருத்தப்படுகின்ற சூரிய கல முறைகள் தொடர்பான ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படும். ADB கூரையில் பொருத்தப்படுகின்ற சூரிய சக்தி PV உருவாக்க கருத்திட்டத்தைப் பயன்படுத்தி கருத்திட்டத்திற்கான நிதியிடல் இலகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். பிரேரிக்கப்பட்ட இந்திய கடன் வசதியும் இதற்காக பயன்படுத்தப்படும்.

#### RE 05 - நன்கொடையாளர் நிதி கருத்திட்டங்கள்

ADB உதவி வழங்கப்பட்ட மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டு கருத்திட்டம் மற்றும் ருணோ இனால் உதவியளிக்கப்பட்ட உயிர் வாயு சக்தி அபிவிருத்தி கருத்திட்டம் ஆகியன தொடரப்படும்.

#### RE 06 - ஹம்பாந்தோட்ட சூரிய சக்தி பூங்கா

ஹம்பாந்தோட்டை சூரிய சக்தி பொறித்தொகுதி தொழிற்பாடுகளானது இவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நீர் அழுத்த முறைகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்காக பயிற்சி நிலையம் ஒன்றும் தாபிக்கப்படும்.

#### RE 07 - இந்துரன சிறிய நீர் மின்வலு பொறித்தொகுத

இந்துரன சிறிய நீர் மின்வலு பொறித்தொகுதி தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### உபாய ரீதியான பிரிவு

#### ST 01 - புத்தாக்க சக்தி அபிவிருத்தி திட்டம

மீள்புத்தாக்க சக்தி வள திட்டமிடல்கள் மற்றும் புத்தாக்க சக்தி வள கையிருப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக புத்தாக்க சக்தி வள அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இது இலங்கை மின்சார சபையின் உற்பத்தி மற்றும் மின் வளங்கள் திட்டமிடல் பிரிவுடன் கூட்டிணைந்து மேற்கொள்ளப்படும்.

#### ST 02 - காற்று வள மதிப்பீடு

கடந்த காலங்களில் தேசிய காற்று திணிவு வலையமைப்பை பயன்படுத்தி தேசிய ரீதியாக காற்று வள மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான காற்று மின்சக்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை உதவியது. தனியார் துறையும் இதற்கு உதவியது. இந்த அளவீட்டு நிகழ்ச்சித்திட்டமானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்கால கருத்திட்டங்களுக்கான உதவிகளையும் வழங்கும்.

#### ST 03 - பூனேரியன் காற்று - சூரிய கலப்பு சக்தி பூங்கா

பூனேரியன் காற்று - சூரிய கலப்பு சக்தி பூங்கா தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன. கரையோரப் பறவைகள் மற்றும் வௌவால் தொடர்பான ஆய்வுகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றன. இவை பூரணப்படுத்தப்படும் அத்தோடு சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான தாக்க மதிப்பீடு, புவியியல் சார்ந்த ஆய்வு மற்றும் தொல்பொருளியல் தாக்க மதிப்பீடு ஆகியன திட்டமிடப்பட்டுள்ளன. காணியை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

#### ST 04 - சியம்பலாண்டுவ 100 மெகாவாட் சூரிய மின்சக்தி

சியபலாண்டுவ 100 மெகாவாட் சூரிய மின்சக்தி பூங்கா தொடர்பான ஆரம்ப கருத்திட்ட அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான தளத்தை அளத்தல் மற்றும் காணி கையகப்படுத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் இக்கருத்திட்டத்திற்கான விலைமனு கோரப்படும்.

#### ST 05 - மன்னார் கட்டம் II

மன்னாரில் ஒட்டுமொத்தமாக காணப்படுகின்ற காற்று மின்சக்தியின் ஆற்றலானது 375 மெகாவாட் என இனங் காணப்பட்டுள்ளது. இதன் முதலாவது 100 மெகாவாட் திட்டத்தை இலங்கை மின்சார சபை ஆரம்பிக்கும். இதன் இரண்டாம் கட்டமான 100 மெகாவாட் ஆற்றலுடைய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான முன் சாத்தியப்பாடு ஆய்வு மற்றும் சுற்றாடல் சமூக தாக்க மதிப்பீடுகள் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளன.

### கேள்வி பக்க முகாமைத்துவ (DSM) நிகழ்ச்சித்திட்டங்கள்

### சக்தி முகாமைத்துவப் பிரிவு

#### EM 01- சக்தி முகாமைத்துவ முறையை தாபித்தல்

தரவு அறிக்கையிடல் மென்பொருள் முறையை பயன்படுத்தி சக்தி நுகர்வு வரையறைகள் மேற்கொள்ளப்பட்ட தாபிக்கப்படும். சக்தி நுகர்வு வரையறைகளை பயன்படுத்தி ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இது தொடர்பான ஒழுங்குவிதி உட்கட்டமைப்பு வசதிகள் தோற்றுவிக்கப்படும். சக்தி முகாமையாளர்கள் தொடர்பான சான்றிதழ் திட்டங்கள், சக்தி கணக்காய்வாளர்கள், சக்தி சேவைகள் கம்பனிகள் (ESCOS) மற்றும் பயிற்சிகளை வழங்குதல் ஆகியன தொடரப்படும்.

# செயல்திட்டம் 2021

DRAFT 03
06.02.2023

### EM 02 - சக்தி விடய திறன்மிக்க கட்டிடங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றுக்காக நடைமுறைக் கோவையை அமுல்படுத்தல்

சக்தி வினைத்திறன் கட்டிடங்களுக்கான நடைமுறை கோவை வெளியிடப்படும். அத்தோடு இது தொடர்பான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்படும். நெறிமுறையை பின்பற்றுவதை கட்டாயமாக்கும் விதத்தில் உட்கட்டமைப்பு தொடர்பான ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்படும். வீடுகள் தொடர்பான சக்தி வினைத்திறன் வழிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படும

### EM 03 - உபகரணங்களுக்கான சக்தி சார் சிட்டை ஒட்டுதல் நிகழ்ச்சித்திட்டம்

சக்தி தொடர்பான சிட்டை ஒட்டுதல் நிகழ்ச்சித்திட்டம் தொடரப்படுவதுடன் LED பெனல்கள், குளிர் சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், மோட்டார்கள், நீர் பம்புகள், ரய்ஸ் குகர்கள், கேஸ் குகர்கள், தொலைக்காட்சி, கணினிகள் போன்றனவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### EM 04 - சக்தி தொடர்பான தகவல்கள்

சக்தி சார்பான தரவுகளை சேகரித்து அவற்றை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடரப்படும் மற்றும் 2020 சக்தி சமநிலை வெளியிடப்படும். தரவுகளை சேகரிப்பதற்கான மென்பொருள் முறைகள் விருத்தி செய்யப்படும். அத்தோடு னுஊ.ளுனுபு தரவு அறிக்கையிடல் அவசியமான முறைகளும் இவற்றுள் உள்ளடக்கப்படும். சமைக்கின்ற முறைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக வாடிக்கையாளர் மத்தியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

### EM 05 - தொழிற்பாட்டு கேள்வி பக்க முகாமைத்துவ (ODSM) நிகழ்ச்சித்திட்டம்

முறைகளிலிருந்து ஒளிருகின்ற தன்மையுடைய விளக்குகளை அகற்றும் நோக்குடன் டுநுனு விநியோக நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். வீதி விளக்குகள் தொடர்பில் பொருத்தமான தொழில்நுட்பத்தை மேற்கொள்வதற்காக ஆய்வு மேற்கொள்ளப்படும். அத்தோடு இது தொடர்பான ஒழுங்குவிதிகள் வெளியிடப்படும். வினைத்திறன்மிக்க குளிரூட்டிகள், வினைத்திறன்மிக்க குளிர் சாதனப் பெட்டிகள், வினைத்திறன்மிக்க விளக்குகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

### EM 06 - அறிவுரை மற்றும் ஆலோசனை சேவைகள்

சக்தி சார்ந்த கணக்காய்வுகள், உபகரணம் சார்ந்த உதவிகள், சக்தி வினைத்திறன்மிக்க ஆலோசனை சேவைகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறைகள் தம்மை மேம்படுத்துவதற்கான இலகுபடுத்தல்கள் வழங்கப்படும்.

### EM 07 - அடைவுகளுக்கு விருதளித்தல்

வீடு சார் சக்தி வினைத்திறன் வழிகாட்டிகள் மூலம் வீட்டு கட்டிடங்களின் சக்தி சார் வினைத்திறனை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு சக்தி வினைத்திறன்மிக்க வீடு விருதளித்தல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் மற்றும் இவை இலங்கை தேசிய சக்தி வினைத்திறன் விருதளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்படும்.

### EM 08 - R & D/ முன்னோடி கருத்திட்டங்கள்

சக்தி வினைத்திறன் தொழில்நுட்பங்கள் தொடர்பான ஆய்வு மற்றும் முன்னோடி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

## அறிவு முகாமைத்துவ பிரிவு

### KM 01- சக்தி கல்வி நிகழ்ச்சித்திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான சக்தி கல்வி நிகழ்ச்சித்திட்டம், முன்பள்ள மட்டங்கள், பாடசாலை சக்தி கழக நிகழ்ச்சித்திட்டங்கள், சாரணர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன மேற்கொள்ளப்படும்.

### KM 02- தொடர்பாடல் நிகழ்சித்திட்டங்கள

ஊடகம், வாசிப்பு புத்தகங்கள், ஊக்குவிப்பு வீடியோக்கள், கண்காட்சிகள் போன்ற மாறுபட்ட தொடர்பாடல் முறைகள் மூலம் சக்தி மேம்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக நிலைபேறான சக்தி தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### KM 03 - பெண்கள் வலுவூட்டல் நிகழ்சித்திட்டம்

நிலைபேறான சக்தி அபிவிருத்தி செயன்முறையில் பெண்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு சக்தி வினைத்திறன் தொடர்பான கணினி பிரயோகங்கள் விசேடமாக விருத்தி செய்யப்படும்.

### KM 04 - இந்துரனவை செயற்படுத்துதல

இந்துரன நீர் மின்வலு பயிற்சி நிலைய அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும், கல்வித் துறைக்கான வளவாளர் பயிற்சி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான திரவ இயந்திரவியல் நடைமுறை பயிற்சிகள் ஆகியன மேற்கொள்ளப்படும்.

# நிதிக் கூற்று

DRAFT 03
06.02.2023

# வருமானக் கூற்று

| 2020 டிசம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கானது (சகல தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது) | குறிப்பு | 2020 | 2019 மீள் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| தொழிற்பாட்டு வருமானம் | 3 | 294,715,582 | 280,933,012 |
| தொழிற்பாடு சாராத வருமானம் | 4 | 41,367,716 | 85,770,181 |
| மொத்த வருமானம் | | 336,083,298 | 366,703,193 |
| செலவுகள் | | | |
| கருத்திட்டம் / செயற்பாட்டு செலவுகள் | 5 | | |
| மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி | 5.1 | 35,919,399 | 48,476,570 |
| சக்தி முகாமைத்துவம் | 5.2 | 14,219,330 | 33,195,655 |
| அறிவு முகாமைத்துவம் | 5.3 | 5,736,895 | 8,963,770 |
| உபாய ரீதியான செயற்பாடுகள் | 5.4 | 5,727,915 | 9,667,808 |
| | | 61,603,539 | 100,303,803 |
| மீண்டுவரும் செலவுகள் | 6 | | |
| சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 6.1 | 108,185,111 | 92,202,463 |
| போக்குவரத்து மற்றும் ஜீவனம் | 6.2 | 769,938 | 1,647,123 |
| விநியோகம் | 6.3 | 4,648,745 | 3,976,402 |
| பராமரிப்பு செலவுகள் | 6.4 | 8,359,168 | 10,288,766 |
| ஒப்பந்த சேவை | 6.5 | 54,835,600 | 56,708,875 |
| தேய்மான செலவுகள் | 6.6 | 46,326,457 | 44,125,670 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 6.7 | 11,166,182 | 11,115,186 |
| | | 234,291,201 | 220,064,485 |
| மொத்த செலவுகள் | | 295,894,740 | 320,368,288 |
| மிகை / (பற்றாக்குறை) | | 40,188,558 | 46,334,905 |

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்காக



பணிப்பாளர் (நிதி)



பணிப்பாளர் நாயகம்



தவிசாளர்

ஒஒ பக்கங்கள் முதல் ஒஒ பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஒஒ பக்கம் முதல் ஒஒ பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற குறிப்புகள் ஆகியன இந்த நிதிக் கூற்றுகளின் முக்கிய அங்கமாகும். இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்து அவற்றை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவ சபை பொறுப்பாக இருக்கின்றது. இந்த நிதிக் கூற்றுகளானது முகாமைத்துவ சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அதன் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளது.



1. A.K. குணசெகர

DRAFT 03
06.02.2023

# நிதி நிலை கூற்றுகள்

| 2020 டிசம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கானது (சகல தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது) | குறிப்பு | 2020 | 2019 மீள் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடப்பு சாரா சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 10 | | |
| இறையிலி ஆதனம் | 10.1 | 474,698,637 | 505,929,113 |
| குத்தகை ஆதனம் | 10.2 | 37,449,436 | 38,977,984 |
| கட்புலனாகா சொத்துக்கள் | 11 | 2,472,914 | 2,285,407 |
| வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது | 12 | 71,726,510 | 70,759,244 |
| முதலீடுகள் | 13 | 111,803,519 | 102,332,758 |
| மொத்த நடப்பு சாரா சொத்துக்கள் | | 698,151,016 | 720,284,505 |
| **நடப்பு சொத்துக்கள்** | | | |
| வரவேண்டியவைகள் | 14 | 23,312,323 | 29,747,743 |
| ஏனைய நடப்பு சொத்துக்கள் | 15 | 40,449,258 | 33,993,375 |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள் | 16 | 458,733,159 | 437,313,627 |
| மொத்த நடப்பு சொத்துக்கள் | | 522,494,740 | 501,054,745 |
| மொத்த சொத்துக்கள் | | 1,220,645,756 | 1,221,339,250 |
| **உரிமை முதல் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **உரிமை முதல்** | | | |
| திரண்ட நிதி | 17 | 22,100,336 | 22,100,336 |
| தேறிய மிகை / பற்றாக்குறை | | 198,550,939 | 181,091,009 |
| பிற்போடப்பட்ட மானியம் | 18 | 338,856,524 | 377,274,934 |
| இலங்கை நிலைபெறுதகு வலு நிதி | 20 | 385,061,629 | 370,902,975 |
| நிலைபெறு தகு உத்தரவாத நிதியம் | | 115,895,545 | 107,419,486 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 101,217,000 | 101,217,000 |
| மொத்த உரிமை முதல் | | 1,161,681,973 | 1,160,005,740 |
| **நடப்பு சாரா பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | | 34,010,857 | 24,427,119 |
| மொத்த நடப்பு சாரா பொறுப்புகள் | | 34,010,857 | 24,427,119 |
| **நடப்பு பொறுப்புகள்** | | | |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 19 | 19,903,441 | 31,856,906 |
| காணி கையகப்படுத்தல் தொடர்பான தேறிய வைப்பு | | 5,049,485 | 5,049,485 |
| மொத்த நடப்பு பொறுப்புகள் | | 24,952,926 | 36,906,391 |
| மொத்த உரிமை முதல் மற்றும் பொறுப்புகள் | | 1,220,645,756 | 1,221,339,250 |

XX பக்கங்கள் முதல் XX பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியன இந்த நிதிக் கூற்றுகளின் முக்கிய அங்கமாக காணப்படுகின்றது.

# உரிமை முதல் மாற்றங்கள் தொடர்பான கூற்று

Year ended 31st December 2020
(All amounts in Sri Lanka Rupees)

| விளக்கம் | திரட்டிய திட்டம் | தேறிய மிகை / பற்றாக்குறை | பிற்போடப்பட்ட மானியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம் | நிலைபேறான உத்தரவாத நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2018.12.31 இல் உள்ள மீதி | 22,100,336 | 189,150,948 | 423,846,967 | 101,217,000 | 335,605,770 | 98,275,578 | 1,170,196,599 |
| கடந்த வருட சீர் செய்தல்கள் | | (9,953,731) | | | | | (9,953,731) |
| 2019.01.01 இல் உள்ள மீள் குறிப்பிடப்பட்ட மீதி | 22,100,336 | 179,197,217 | 423,846,967 | 101,217,000 | 335,605,770 | 98,275,578 | 1,160,242,868 |
| 2019 ஆம் வருடத்திற்கான அதிகரிப்பு (குறைவு) | | 46,334,905 | (46,572,033) | | | | (237,128) |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்டவை | | (9,143,908) | | | | 9,143,908 | - |
| சக்தி நிதி - வருமானத்திற்கு மாற்றப்பட்டவை | | (44,628,149) | | | 44,628,149 | | - |
| சக்தி நிதி கருத்திட்ட செலவுகளுக்கு மாற்றப்பட்டவை | | 9,330,944 | | | (9,330,944) | | - |
| காணி மீள் மதிப்பீடு | | | | | | | |
| 2019.12.31 இல் மீதி | 22,100,336 | 181,091,009 | 377,274,934 | 101,217,000 | 370,902,975 | 107,419,486 | 1,160,005,740 |
| கடந்த வருட சீர் செய்தல்கள் | | (93,915) | | | | | (93,915) |
| 2020 ஆம் வருடத்திற்கான அதிகரிப்பு (குறைவு) | | 40,188,558 | (38,418,410) | | | | 1,770,148 |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்டவை | | (8,476,059) | | | | 8,476,059 | - |
| சக்தி நிதி - வருமானத்திற்கு மாற்றப்பட்டவை | | (19,817,444) | | | 19,817,444 | | - |
| சக்தி நிதி கருத்திட்ட செலவுகளுக்கு மாற்றப்பட்டவை | | 5,658,790 | | | (5,658,790) | | - |
| காணி மீள் மதிப்பீடு | | | | | | | |
| 2020.12.31 இல் மீதி | 22,100,336 | 198,550,939 | 338,856,524 | 101,217,000 | 385,061,629 | 115,895,545 | 1,161,681,973 |

XX பக்கங்களிலிருந்து XX பக்கங்கள் வரை காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியன நிதிக் கூற்றுகளின் முக்கிய அங்கமாகும்.

DRAFT 03
06.02.2023

DRAFT 03
06.02.2023

# காசேட்டு கூற்றுகள்

| 2020 டிசம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கானது (சகல தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது) | குறிப்பு | 2020 | 2019 மீள் குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் | | | |
| வருடத்திற்கான மிகை (பற்றாக்குறை) | | 40,188,558 | 46,334,905 |
| சீர் செய்தல்கள்: | | | |
| இழப்பு மற்றும் பாதிப்பு | | - | - |
| வட்டி வருமானம் | 3 , 8 | (22,439,783) | (21,829,607) |
| இலதாக்கப்பட்ட மானியம் (கிடைக்கப் பெற்ற நிதிகளுக்கு) | 7 | (38,418,410) | (46,572,033) |
| சக்தி நிதியிலிருந்தான மாற்றங்கள் | | - | - |
| பணிக்கொடை ஏற்பாடு | | 9,917,344 | 2,035,590 |
| வாகன நன்கொடை | | (7,800,000) | - |
| நிரந்தர சொத்துக்களை விற்ற இலாபம் | | - | (12,359,442) |
| தேய்மானம் | 5.6 | 46,326,457 | 44,125,670 |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் (நட்டம்) | | 27,774,166 | 11,735,083 |
| ஏனைய நடப்பு சொத்துக்களில் (அதிகரிப்பு / குறைவு) | | (1,015,167) | (22,482,644) |
| நடப்பு பொறுப்புகளில் அதிகரிப்பு (குறைவு) | | (11,953,465) | 12,676,245 |
| காசோட்டத்தை தோற்றுவித்த தொழிற்பாட்டு செயற்பாடுகள் | | 14,805,534 | 1,928,684 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (333,606) | (1,516,201) |
| தொழிற்பாட்டு செலவுகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | 14,471,928 | 412,483 |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான பண பாய்ச்சல் (பயன்படுத்தப்பட்டது) | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரண கொள்வனவு | 9.1 | (3,928,516) | (13,650,053) |
| கட்புலனாகா சொத்துக்கள் | | (2,026,415) | (600,400) |
| வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது | 11 | (967,266) | (26,702,037) |
| நிரந்தர வைப்புகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதலீடு | 12 | (9,470,761) | (8,745,716) |
| வட்டி வருமானம் | 3 , 8 | 23,434,485 | 21,431,414 |
| நிரந்தர சொத்துக்களை விற்றல் | | - | 12,359,442 |
| அபிவிருத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் | | - | - |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம் (பயன்படுத்தப்பட்டது) | | 7,041,527 | (15,907,350) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் (பயன்படுத்தப்பட்டது) | | | |
| பிற்போடப்பட்ட மானியம் | 18 | | - |
| இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம் | | - | - |
| திரட்டிய நிதி | | (93,923) | - |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | | - | - |
| வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்கள் | | - | - |
| யுனுடீ இடமிருந்தான கடன்கள் (டு 2892 ளுசுஐ) | 13 | - | - |
| யுனுடீ பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் (டு 2733 ளுசுஐ) | 13 | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | (93,923) | - |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | 21,419,532 | (15,494,867) |
| வருட ஆரம்பத்தின் பொழுது பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள் | 16 | 437,313,627 | 452,808,494 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு நிகரானவைகள் | | 458,733,159 | 437,313,627 |

XX பக்கங்கள் முதல் XX பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியன இந்த நிதிக் கூற்றுகளின் முக்கிய அங்கமாக காணப்படுகின்றது.

DRAFT 03

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1. கூட்டுறவு தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை நிலைபெறு வலு அதிகாரசபையானது (SLSEA) 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது கொழும்பு 07, 72 ஆம் இலக்க ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் காணப்படுகின்றது.

1985 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சக்தி பாதுகாப்பு நிதி (ECF) சட்டமானது அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக 2007 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டம் உருவாக்கப்பட்டது. 2007 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் நுஊகு இடம் காணப்பட்ட சகல விதமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியன 2007 ஒக்டோபர் 01 ஆம் திகதி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) இன் கணக்குகளுக்கு தானாக மாற்றப்பட்டது.

### 1.2 அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகள்

சக்தி அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல், சக்தி வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல், சக்தி பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், சக்தி விநியோகத்தில் செலவுச் சிக்கனம் மற்றும் நம்பகத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் சக்தி விநியோகம் மற்றும் கேள்வி தொடர்பான தகவல் முகாமைத்துவத்தை மேற்கொள்ளல் உள்ளடங்கலாக புத்தாக்க சக்தி வளங்களை அபிவிருத்தி செய்தல், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) இன் பிரதான செயற்பாடுகளாகும்.

### 1.3 அதிகாரசபையின் நிதி

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் SLSEA ஆனது மூன்று நிதிகளை பேணி தொழிற்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன பின்வருமாறு,

#### 1.3.1 அதிகாரசபையின் நிதி

ஆரம்பக் கட்ட முதலீட்டை வைப்புச் செய்தல், அனுமதி கட்டணங்கள், கடன்கள், குத்தகை, வாடகை பணங்கள், பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள் ஆகியவற்றை இந்த நிதி பேண வேண்டும். அதிகாரசபையானது தனது அதிகாரங்களை பயன்படுத்துகின்ற பொழுது பிரயோகிக்கின்ற பொழுது அல்லது செயலாற்றுகின்ற பொழுது அதிகாரசபைக்கு ஏற்படுகின்ற மீறல் செலவான சகல தொகைகளும் சட்டத்தின் பிரகாரமான செயற்பாடுகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றினால் எழுகின்ற செலவினங்களும் இந்த நிதியிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

#### 1.3.2 இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம்

திரட்டிய நிதியத்திலிருந்தான ஆரம்ப நன்கொடையை வைப்புச் செய்தல், செஸ் தொடர்பான இலாபங்கள், விசுவாச நிதியம், தொழில்வான்மை சேவைகளுக்கான கட்டணங்கள், குத்தகை, வாடகை பணம், விண்ணப்ப கட்டணங்கள், காபன் சொத்துக்களை பேணுவதற்கான கட்டணங்கள் ஆகியவற்றுக்காக இந்த நிதி பேணப்படுகின்றது.

புத்தாக்க சக்தி மாற்ற பொறித்தொகுதிகளுக்கான மானியங்கள், சக்தி வினைத்திறன் பிரயோகங்களை மேம்படுத்துவதற்கான மானியங்கள், தொழில்நுட்பங்கள், எரிபொருள் மாற்றத்திற்கான மானியங்கள், விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவுகள், சக்தி பாதுகாப்பு முறைகளை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவுகள் ஆகியன இந்த நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

#### 1.3.3 நிலைபேறான உத்தரவாத நிதியம்

சக்தி வினைத்திறன் தொடர்பான கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக கடனை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கின்ற முதலீட்டாளர்கள் சார்பாக உத்தரவாதங்களை வழங்குவது இந்த நிதியின் நோக்கமாகும். சட்டத்தின் பிரகாரம் இந்த நிதியானது திரட்டிய நிதியத்திலிருந்து ஆரம்ப நிதியமாக வழங்கப்பட வேண்டும். வருடாந்த காப்பீட்டுக் கட்டணம் மற்றும் உத்தரவாதங்களுக்கான வட்டிகள் அதிகாரசபை நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிதி ஆகியனவும் உள்ளடங்கும்.

### 1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

2020 டிசம்பர் 31 இல் ஊழியர்களின் எண்ணிக்கை - 101

## 2.1 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு

#### 2.1.1 இணக்கப்பாட்டு கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படை

ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமை முதல் மாற்ற கூற்றுக்கள் மற்றும் காசோட்டம் ஆகியன 2020 டிசம்பர் 31 இல் SLSEA இல் உள்ளவாறு அவற்றுடன் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தராதரங்கள் இற்கு ஏற்ப கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.

SLSEA இன் நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது. வரலாற்று செலவு சமவாயத்தின் கீழ் அட்டுறு அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டன. பொருத்தமான சந்தர்ப்பங்களில் கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான விபரங்கள் அடுத்த குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

DRAFT 03
06.02.2023



### 2.1.2 ஒப்பீட்டு உருக்கள்

தற்போதைய நிதி வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உறுதி செய்து கொள்வதற்காக ஒப்பீட்டு உருக்கள் சீர் செய்யப்பட்டன. 2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு உருக்கள் மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

### 2.2.1 அரசாங்க மானியங்களுக்கான கணக்குகள் மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்தல்

நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது, இவற்றை தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியுமா, பொருத்தமானவைகள் வெளியிடப்பட்டிருக்கின்றவா, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற விடயங்கள், அதிகாரசபையை கலைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தால் அன்றி அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது வேறு விதமான மாற்றீடுகள் இல்லை, இருப்பினும் தொடர வேண்டும் என முகாமைத்துவம் வேறு விதமாக தீர்மானித்தால் அன்றி இதனை தொடர்ச்சியாக கொண்டு நடாத்துகின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பு நிருவாக அதிகாரிகளுக்கு காணப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு பிரிவின் பிரகாரம், புத்தகங்களை உரிய முறையில் பேணுதல், பதிவுகள், வருமானம், செலவு சொத்துக்கள், பொறுப்புகள் ஆகியன சம்பந்தமான விடயங்களை உரிய முறையில் பேணுவதற்கு அதிகாரசபை பொறுப்பாக இருப்பதோடு அதிகாரசபையினாலேயே வருடாந்த மற்றும் குறிப்பிட்ட காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுகள் ஆகியவற்றை தயாரிப்பதற்கான இயலுமைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

DRAFT 03
06.02.2023

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.5 நிதிக் கூற்றுகளை கணக்காய்வு செய்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்

இந்த நிதிக் கூற்றுகளானது முழுமையாக இவற்றுள் பிழையான விடயங்கள் குறிப்பிடவில்லை என்பதை உறுதி செய்து கொள்வதும் இவற்றுள் மோசடிகள் அல்லது பிழைகள் இடம்பெறவில்லை என்பதை பார்ப்பதும் எனது அபிப்பிராயத்தின் படி அத்தகைய விடயங்கள் இடம்பெறவில்லை என்பதை நியாயமான அளவுக்கு உறுதிப்படுத்துவதும் எனது நோக்கமாகும். நேர்மை தொடர்பான உறுதிப்பாடுகளானது உயர் மட்ட உறுதிப்பாடாக காணப்பட்ட பொழுதிலும் இந்த கணக்காய்வானது இலங்கை கணக்கீட்ட தராதரங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் பொருள் ரீதியாக விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்ற பொழுது அவற்றை கண்டறிகின்றது. மோசடி அல்லது பிழைகளின் காரணமாக எழக்கூடிய பிழையாக குறிப்பிடப்பட்டிருக்கின்ற விடயங்கள் இவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ காணப்படும் பட்சத்தில் பொருளாதார ரீதியான தீர்மானங்களை நியாயமான அளவில் தாக்கக்கூடிய செல்வாக்கு அவை செலுத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன் இந்த நிதிக் கூற்றின் அடிப்படைகளையும் இவை காட்டுகின்றன

இந்த கணக்காய்வுகளை மேற்கொள்கின்ற பொழுது இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ப தொழில்வாண்மைமிக்க தீர்மானங்களை மேற்கொள்வதோடு தொழில்வாண்மை ரீதியான சந்தேகங்களும் பேணப்பட்டுள்ளன. மேலும்,

- நிதிக் கூற்றுகளில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பான பிழையாக குறிப்பிடப்படுவதனால் ஏற்படப்படுகின்ற மதிப்பீட்டு இடர்களை அடையாளம் கண்டு, மோசடி அல்லது பிழையின் காரணமாக ஏற்படுகின்ற, அத்தகைய இடர்களுக்கு பதில் அளிக்கக்கூடிய விதத்தில் கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைத்து பிரயோகித்தல், கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொண்டு எனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான வரையில் எனது அபிப்பிராயங்களை வழங்குதல். மோசடி அல்லது அதிகமாக காணப்படுதல் அல்லது தவறினால் இவை ஏற்பட்டிருக்கலாம் போன்ற பொருள் சார்ந்த இடர்கள் கண்டறியப்படாமையினால் ஏற்படுகின்ற இடர்கள், மோசடியினால் ஏற்படுகின்ற தாக்கங்கள், பிழையான செயற்பாடுகள், வேண்டுமென்றே விடப்பட்டவைகள், பிழையான பிரதிநிதித்துவங்கள் அல்லது மிகை விடயங்கள் போன்றன உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- சூழ்நிலைக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கு முகமாக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல்கள் காணப்பட்ட பொழுதிலும் அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான கருத்துக்களின் பயனுறுதித்தன்மையை வெளிப்படுத்துவதற்கான நோக்கம் இல்லை.
- கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நேர்மை, முகாமைத்துவத்தினால் வெளிப்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டன.
- பெறப்பட்ட கணக்காய்வு சான்றிதழ்களின் அடிப்படையில் அதிகாரசபையின் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல் பயன்பாட்டின் அடிப்படையில் பொருத்தப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம். பொருட்கள் பற்றிய நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில் நிதிக்கூற்றுகளில் சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களில் என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் இது சம்பந்தமான அவதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் தேவைப்படுத்தப்பட்டுள்ளேன் அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதாத பட்சத்தில் என்னுடைய கருத்தை சீர் செய்தல் வேண்டும். இருப்பினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளானது இதனது செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளாமல் நிறுத்துவதற்கான தேவையை அதிகாரசபைக்கு ஏற்படுத்தலாம்.
- ஒட்டுமொத்த சமர்ப்பணத்தின் பொழுது நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு அல்லது உள்ளடக்கமானது, வெளிப்படுத்தல்கள் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிதிக் கூற்றுகளானது பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்ற அடிப்படையில் இங்கு குறிப்பிடப்பட்ட விடயங்களை நேர்மையான முறையில் அடையக் கூடிய விதத்தில் சமர்ப்பணங்கள் காணப்படுகின்றதா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- ஏனைய விடயங்களுடன் எனது கணக்காய்வின் பொழுது உள்ளக கட்டுப்பாடில் குறிப்பிடக்கூடிய குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டனா என்பது உள்ளடங்கலாக ஏனைய விடயங்கள் உள்ளடங்கலாக குறிப்பிடக்கூடிய கணக்காய்வு கண்டறிதல்கள் தொடர்பில் நிருவாக அதிகாரிகளுடன் அவற்றை நான் எடுத்துரைத்துள்ளேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான தேவைப்பாடுகள்

### 2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம். இது பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

2.1.1 என்னுடைய ஆய்வின் பொழுது இயலுமானவரை சகல விதமான தகவல்களையும் விளக்கங்களையும் கணக்காய்விற்காக நான் பெற்றுக் கொண்டேன். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான கணக்கீட்டு பதிவுகள் அதிகாரசபையினால் பேணப்பட்டது

**2.1.2** இங்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடந்த வருடம் தொடர்பில் முரணற்றதாக காணப்பட்டன.

DRAFT 03
06.02.2023

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.1.3 இங்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல விதப்புரைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

2.2 மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் மற்றும் என்னால் பெறப்பட்ட சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பின்வரும் பிரகடனங்களை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் முக்கியமான விடயங்கள் எதுவும் எனது அவதானத்திற்கு தோன்றவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவின் பிரகாரம் தேவைப்பாடுகளின் பிரகாரம் சாதாரண வியாபார செயன்முறைகளுக்கு அப்பால் அதிகாரசபையின் முகாமைத்துவ சபையானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதாவது ஒப்பந்தங்களை மேற்கொண்டதாக தோன்றவில்லை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(உ) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சபையானது ஏதாவது எழுதப்பட்ட சட்டம் அல்லது பொதுவான மற்றும் விசேட நெறிப்படுத்தல்கள் ஆகியவற்றிற்கு இணங்காமல் நடக்கவில்லை என பின்வருவனவற்றை தவிர குறிப்பிடுகின்றேன்.

| சட்டம் அல்லது நெறிப்படுத்தல்களின் படி | | விளக்கம் |
|---|---|---|
| அ). | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தின்நிதிசார் ஒழுங்குவிதிகள் | |
| (i). | நிதிப் பிரமாணம் 396(ஈ) | FR 396(ஈ) இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாத காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பினும் கூட 2014 முதல் 2020 வரையிலான காலப் பகுதியில் 60 காசோலைகள் தொடர்பில் அதிகாரசபையானது எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதன் மொத்தப் பெறுமதி 6,781,378 ஆகும். மேலும் 2020 டிசம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா. 30,632,380 ஆகும். |
| (ii). | நிதிப் பிரமாணம் 880 (i) | அரசாங்க அதிகாரிகள் (பாதுகாப்பு) கட்டளைச் சட்ட (ஊயி. 612) இன் பிரகாரம் பாதுகாப்பினை வழங்க வேண்டும். இருப்பினும் நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் எந்த அதிகாரியும் இவ்வாறு மேற்கொள்ளவில்லை. |

DRAFT 03
06.02.2023

உனஉ எஎெனாஎனெஎா

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| சட்டம் அல்லது நெறிப்படுத்தல்களின் படி | | விளக்கம் |
|---|---|---|
| ஆ). | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | |
| (i). | அத்தியாயம் ஐஐ 15:1(ix) பிரிவு | ஆட்சேர்ப்பு அதிகாரசபை நிருவாக அதிகாரசபை மற்றும் நிறுவனத் தலைவர் ஆகியோர் வினைத்திறன் சோதனை உரிய நேரத்தில் நடத்துவதற்கு பொறுப்பாக இருப்பர். மேலும் 15.1(ஸை) ஆம் பிரிவின் பிரகாரம் சம்பள அளவுத்திட்டத்தை தீர்மானிக்கையில் நான்காவது சம்பள படிமுறையை அடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் சோதனையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தனது நிலை தொடர்பில் அதிகாரி ஒருவர் அடுத்த சம்பள படியேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு அருகதையுடையவரா என்பதை தீர்மானிப்பதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது. எப்படியிருப்பினும், அத்தகைய வினைத்திறன் தொடர்பான பரீட்சையை அதிகாரசபை மேற்கொள்ளவில்லை. அத்தோடு அதிகாரிகளுக்கு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| இ). | பொது நிருவாக சுற்று நிருபங்கள் | |
| (ii) | 2008 பெப்ரவரி 06 ஆம் திகதியிடப்பட்ட 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சகல அரசாங்க நிறுவனங்களும் "பிரஜைகள்/ வாடிக்கையாளர் சமவாயம்" அறிமுகப்படுத்த வேண்டுமெனினும் அறிக்கையிடும் திகதி வரையில் இது தொடர்பான எத்தகைய நடவடிக்கைகளையும் அதிகாரசபை மேற்கொள்ளவில்லை. |
| (iii) | 2016 பெப்ரவரி 29 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.0 பிரிவு | ஒவ்வொரு எரிபொருள் சோதனை அல்லது 25,000 கி.மீ தூரத்தை ஓடிய பின்னர் அல்லது குறிப்பிட்ட இயந்திரத்தில் முக்கிய திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதன் படி எரிபொருள் நுகர்வு பற்றிய மீள் சோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனிலும் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. |
| (iv) | 2018 சனவரி 24 ஆம் திகதியிடப்பட்ட 02/2018 ஆம் இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கை | சுற்று நிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாவது படிவத்தின் பிரகாரம் தற்போது காணப்படுகின்ற தேர்ச்சி குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக தற்போதைய தேர்ச்சி மற்றும் பணியாளர் தொகுதியில் உள்ள அனைவரும் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சி தொடர்பில் கண்டறிவதற்காக மனித வளங்கள் விருத்தி திட்டம் ஒன்று தயார் செய்தல் வேண்டும் என இருப்பினும் கூட குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டை அதிகாரசபையானது நிறைவேற்றவில்லை. |

DRAFT 03
06.02.2023

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| சட்டம் அல்லது நெறிப்படுத்தல்களின் படி | விளக்கம் |
|---|---|
| ஈ) 2017 ஜூலை 25 ஆம் திகதியிடப்பட்ட 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்று நிருபம் | • நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான உள்ளக சுற்றுநிருபங்கள் அல்லது வழிகாட்டிகளை விநியோகித்தல் மற்றும் விருப்பமானவர்களுக்கு பயிற்சிக்கான வாய்ப்புகளை வழங்குதல் ஆகியன 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெறவில்லை.<br>• பௌதீக வளங்களை ஒதுக்குவதற்கான பொறிமுறை மற்றும் பணியாளர்கள் மற்றும் குறிப்பிட்ட செயன்முறையை ஒழுங்குபடுத்தும் விடயங்கள் ஆகியன அடையாளம் காணப்படவில்லை. |
| உ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 1/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்று நிருபம் | 2020 ஆம் ஆண்டிற்கான பொருட்களை கணக்கெடுத்தல் பட்டியலானது 2021 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பொழுதிலும் அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பொருட்களை கணக்கெடுத்தல் பட்டியலானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| ஊ) 1978 டிசம்பர் 19 ஆம் திகதியிடப்பட்ட 842 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபம் | நிரந்தர சொத்துகளுக்கான நிரந்தர சொத்துக்கள் பதிவு புத்தகமானது இதன் தேறிய பெறுமதி ரூபா. 512,148,073 ஆக காணப்பட்ட பொழுதிலும் இது முறையாக பேணப்படவில்லை. |
| எ) 2003 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்ட PED/12 பொது தொழில்முயற்சி சுற்று நிருபம் பிரிவு 6.5.1 | கணக்கீட்டு வருடத்தின் 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள பொழுதிலும் அதிகாரசபையின் நிதிக் கூற்றுகளானது 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி கணக்காய்விற்கான சமர்ப்பிக்கப்பட்டது. இது 293 நாட்கள் தாமதத்தின் பின்னரே |
| ஏ) 2019 சனவரி 12 ஆம் திகதியிடப்பட்ட DMA/01 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வு சுற்று நிருபத்தின் பிரிவு 8.3 | 2020 ஆம் ஆண்டிற்கான வாகன செலவு அறிக்கையை அதிகாரசபை தயார் செய்து அதனை முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கவில்லை |
| ஐ) கொள்வனவு கையேட்டின் பிரிவு 5.4.8 | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிடமிருந்து செயலாற்றுகை உத்தரவாதம் தொடர்பான சான்று விநியோகிக்கப்பட வேண்டும் என்ற பொழுதிலும், எதிர்பார்க்கப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட திகதியின் பின்னர் 28 நாட்களுக்கு செல்லுபடியாகும் என்ற பொழுதிலும், தேசிய புத்தாக்க சக்தி பூங்காவில் ரூபா. 6,409,745 செலவில் தொடர்பான மலசலகூட கட்டிடத் தொகுதியை செயலாற்றுகை உத்தரவாதம் பெறப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகளை அதிகாரசபை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. |
| ஒ) 2007 ஒக்டோபர் 03 ஆம் திகதியிடப்பட்ட கொள்வனவு கையேட்டிற்கான மேலதிக 13 | 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8, 9, மற்றும் 12 ஆம் இலக்க பிரிவுகளின் பிரகாரம் 5 மில்லியன் தொகையை விட அதிகமாக செலவாகும். அரசாங்க ஒப்பந்தங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என காணப்பட்ட பொழுதிலும் கூட மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. |

DRAFT 03
06.02.2023

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ப) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளை தவிர அதிகாரசபையின் தத்துவங்கள் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரசபை இணங்கியதா.

அ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலு அதிகாரசபை சட்டத்தின் 47(1) ஆம் பிரிவின் பிரகாரம் சக்தி வினைத்திறன் தொடர்பான கருத்திட்டங்களுக்காக கடனைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கின்ற முதலீட்டாளர்களுக்காக நிலைபேறான சக்தி வளங்கள் நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டது. அதிகாரசபையானது குறிப்பிடப்பட்ட நிதியை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தது மற்றும் வைப்புகளை மேற்கொண்டது. அத்தோடு 2020 டிசம்பர் 31 இல் அத்தகைய முதலீடுகளின் மொத்த பெறுமதியானது ரூபா. 111,803,519 ஆக பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் நிலைபேறான சக்தி வளங்கள் நிதியத்தை நோக்கங்களை அடைவதற்கு அவசியமான செயற்பாடுகளை இதுவரை அதிகாரசபை நடைமுறைப்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ஆ) மேலும், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 46(3) பிரிவுகளுக்கு முரணாக பத்தரமுல்லையில் காணியொன்றை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 2014 முதல் 2015 வரையில் நிலைபேறான சக்தி நிதியத்திலிருந்து ரூபா. 48,678,878 ஐ அதிகாரசபை செலுத்தியுள்ளது.

இ) இச்சட்டத்தின் 42(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையானது வருடாந்தம் அமைச்சரிடம் இலங்கையின் சக்தித் துறை செயலாற்றுகை தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும் கடந்த வருட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட அறிக்கையை அமைச்சரானவர் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பிப்பார். இருப்பினும் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அதிகாரசபை நடந்து கொள்ளவில்லை.

ஈ) இச்சட்டத்தின் 19(1) ஆம் பிரிவிற்கு ஏற்ப, அனுமதி வழங்கப்பட்ட காலப் பகுதிக்கான அபிவிருத்தியாளர் அனுமதி வழங்கப்பட்ட காலப் பகுதிக்கான தொழிற்பாடு இக்கருத்திட்டத்திலிருந்து புத்தாக்க சக்தி சார்ந்த வளங்கள் பயன்படுத்தப்பட்டமைக்காக வருடாந்தம் அதிகாரசபைக்கு தொகையொன்றினை செலுத்த வேண்டும். இந்த தொகையை அமைச்சரானவர் நிதி அமைச்சருடன் கலந்துரையாடி தீர்மானித்தல் வேண்டும். இது தாபிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அதிகாரசபையானது குறிப்பிடப்பட்ட கட்டணத்தை அறவிடுவதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

DRAFT 03
06.02.2023

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் 12(ர) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர ஏனைய ஏற்புடைய சட்டங்களுக்கு வழங்கப்பட்ட காலப் பகுதியினுள் அதிகாரசபையானது வளங்களை கொள்வனவு செய்து அவற்றை சிக்கனமாக வினைத்திறன்மிக்க முறையில் மற்றும் பயனுறுதிமிக்க முறையில் பயன்படுத்தியதா.

அ) தொழிற்பாட்டு முறையினை கண்காணிப்பதை அவதானிப்பதற்காக தனது வாகன பயன்பாட்டிற்காக 2020 டிசம்பர் 16 இல் ரூபா. 126,000 பெறுமதியுடைய 08 மொபைல் தொலைபேசிகளை அதிகாரசபை கொள்வனவு செய்தது. இருப்பினும் கணக்காய்வு நடைபெற்ற திகதியான 2022 சனவரி 18 ஆம் திகதி வரை குறிப்பிட்ட அந்த முறை பொருத்தப்படவில்லை.

ஆ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா. 385,196,337 ஆனது இரண்டு வங்கிகளில் சேமிப்பு கணக்கில் காணப்படுவதுடன் அதேவேளை அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா. 73,536,822 ஆனது 05 நடைமுறை கணக்குகளில் காணப்படுகின்றது. 2020 டிசம்பர் 31 இல் பயனுறுதிமிக்க முதலீடுகளை மேற்கொள்ளாமல் தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாடுகளை விஞ்சியதாக இது காணப்படுகின்றது.

## 2.3 ஏனைய விடயங்கள்

அ) 2020 டிசம்பர் 31 இல் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் 61 வேலை வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவற்றுள் சிரேஷ்ட பணியாளர் தரங்களில் 27 வேலை வாய்ப்புகளும், 2ஆம் மட்ட வேலை வாய்ப்பு 01 உம், 22 மூன்றாம் தர மட்ட வேலை வாய்ப்புகளும், 11 ஆரம்ப மட்ட வேலை வாய்ப்புகளும் மீளாய்விற்கு உட்பட்ட வருட இறுதியில் காணப்படுகின்றன. உண்மையில் வேலைக்கு அவசியமான பணியாளர்களது எண்ணிக்கை தொடர்பில் பேணுவதற்கு அதிகாரசபை தவறிவிட்டதுடன் எத்தனை பணியாளர்கள் அவசியம் என்பதை உரிய நேரத்தில் கண்டறிவதற்கும் தவறி விட்டது.

ஆ) மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதிக்கான செயல்திட்டம் ஒன்றை அதிகாரசபை தயார் செய்திருந்த போதிலும் கூட அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளினால் எதிர்பார்க்கப்பட்ட செயல் நிறைவேற்றங்கள் அடிப்படை நிதி ரீதியான மற்றும் பௌதீக ரீதியான அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் ஆகியன குறிப்பிடப்பட்ட திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

இ) 2009 முதல் 2016 வரை சிறிய நீர் மின்வலு உற்பத்தி கருத்திட்டங்களுக்காக காணிகளை கையகப்படுத்துவது தொடர்பில் முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா. 5,049,485 தொகையானது 20 முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. இத்தொகையானது நிதிக் கூற்றுகளில் நடப்பு சாரா பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட வேண்டிய தொகையாகும். இருப்பினும் அந்த காணியை கையகப்படுத்துவதை பூரணப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

ஈ) வரவேண்டிய தொகைகளாக குறிப்பிடப்பட்ட ரூபா. 8,406,407 மற்றும் ரூபா. 38,041 ஆகிய தொகைகள் முறையே 1 முதல் 4 வருடங்கள் மற்றும் 1 முதல் 5 வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், இத்தகைய தொகையை அறவிடுவதற்கோ அல்லது இது தொடர்பில் ஏனைய பொருத்தமான வழிமுறைகளையோ மீளாய்விற்கு உட்பட்ட வருடம் முடியும் வரை அதிகாரசபை மேற்கொள்ளவில்லை.

உ) கிடைக்க வேண்டிய முற்கொடுப்பனவுகள் என குறிப்பிடப்பட்ட ரூபா. 11,823,521 ஆனது முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தொகையாக காணப்பட்ட பொழுதிலும் 1 முதல் 4 வருடங்களாக இந்த தொகையை அறவிடுவதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஊ) ஏனைய கொடுப்பனவுகளாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 2,445,149 ஆனது கொடுப்பனவுகளாகவும் கடன் கொடுத்தோர் எனவும் 1 முதல் 4 வருடங்களாக முன்னெடுத்துச் செல்லப்பட்டிருந்தது. மேலும் வைப்புகளாகவும் மற்றும் நானாவித கடன் கொடுத்தோ எனவும் முறையே குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 6,753,677 மற்றும் ரூபா. 2,756,376 ஆனது 5 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் மீளாய்விற்கு உட்பட்ட வருடம் முடிவடையும் வரையில் இத்தகைய தொகைகளை அறவிடுவதற்கான எந்த நடவடிக்கைகளையும் அதிகாரசபை மேற்கொள்ளவில்லை

டப்ளியு.பீ.சி. விக்கிரரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

DRAFT 03
06.02.2023

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

2023.01.17

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு திணைக்களம்இ
306.'.72இ பொல்தூவ வீதிஇ
பத்தரமுல்ல.

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் 2020 டிசம்பர் மாதம் 31ஆந் திகதியில் நிறைவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைகள் பற்றிய 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2022.06.23ஆந் திகதி தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

## 1.2. அபிப்பிராயத்துக்கான அடிப்படை

### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தரநியமங்களிலிருந்து விடுபடுதல்

(அ) 2019ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்காக 2020ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ள, அதற்கு முன்னரான வருடத்தின் கணக்கீட்டுப் பிழைகள் மற்றும் மதிப்பீடுகளின் மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கம் காரணமாக, மேற்கொள்ளப்பட்டுள்ள ஜேர்னல் குறிப்புகளின் மீது கணக்காய்வு மதிப்பீட்டில் இது வரையில் காணப்படும் நிரல் விடயங்களின் மீது மாற்றங்கள் எழுந்துள்ளன.

அரச கணக்கீட்டு தரநியம இலக்கம் 03இன் "கணக்கீட்டுக் கொள்கைகள் வேறுபாடுகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகள்" கணக்கீட்டு தரநியமத்துக்கு ஏற்ப, கருத்தில் கொள்ளப்படும் வருடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள கணக்கீட்டுப் பிழைகள் / மதிப்பீட்டு மாற்றங்கள், கடந்த காலத்துக்கும் ஏற்றவகையில் திருத்தப்பட்டு, நிதிக் கூற்றுக்கான தாக்கமானது கணக்கீட்டுக் குறிப்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இணைப்பில் குறிப்புக்கான தெளிவுபடுத்தல்கள் மற்றம் சமர்ப்பித்தல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2020ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 2019ஆம் ஆண்டுக்காக கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகளில் செலுத்த வேண்டிய கணக்குகளிலான மீதி வேறுபாடுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ளதும், கீழே காட்டப்பட்டுள்ளதுமான கணக்குகளின் மீதிகளை 2019ஆம் ஆண்டுக்கான வருமாத்துக்கு எதிராக சீராக்க வேண்டுமென்பதால், குறிப்பிட்ட ஜேர்னல் குறிப்புகள் சரியான முறையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. மீதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பின்வருமாறு காட்ட முடியும்.

| விபரம் | திருத்தப்பட்டுள்ள அளவு |
|---|---|
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | |
| மின்சார வருமானம் - அம்பாந்தோட்டை /Power Generation of Hambanthota | 354,967.00 |
| கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள் - வலுசக்தி நிதியம் /Trade Receivable EF | 135,629.00 (குறைவடைதல்) |
| VAT Receivable | |
| மொத்த வேறுபாடு (முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில்) | 13,667,254.00 |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | |
| VAT Payable | 1,922,152.00 (குறைவடைதல்) |
| வேறு செலுத்த வேண்டிய செலவுகள் | 27,712.00 (குறைவடைதல்) |
| மொத்த மாற்றம் (முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில்) | 1,949,864.00 |

DRAFT 03
06.02.2023

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களின் மீது அடையாளம் காணப்பட்டுள்ள கணக்கீட்டுப் பிழைகளைத் திருத்துவதற்கான ஜேர்னல் குறிப்புகளை பின்வருமாறு காட்ட முடியும்.

| விபரம் | பற்று | வரவு |
|---|---|---|
| (1) தடுத்து வைக்கப்பட்டுள்ள இலாபம்<br>அம்பாந்தோட்டை மின்சார வருமானம் | 354,967.00 | 354,967.00 |
| (2) தடுத்து வைக்கப்பட்டுள்ள இலாபம்<br>கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள் - மின்வலு நிதியம் | 135,629.00 | 135,629.00 |
| (3) தடுத்து வைக்கப்பட்டுள்ள இலாபம்<br>VAT Receivable | 13,176,658.00 | 13,176,658.00 |
| (4) தடுத்து வைக்கப்பட்டுள்ள வைக்கப்பட்டுள்ள இலாபம் | 1,922,152.00 | 1,922,152.00 |
| (5) ஏனைய செலத்த வேண்டிய கொடுப்பனவுகள்<br>தடுத்து வைக்கப்பட்டுள்ள வைக்கப்பட்டுள்ள இலாபம் | 27,712.00 | 27,712.00 |

நிதிக் கூற்றுகள் மீதான தாக்கமானது, கடந்த காலத்துக்கும் ஏற்ற வகையில் திருத்தப்பட்டு, கணக்கீட்டுக் குறிப்பாக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இணைப்பில் குறிப்பு தொடர்பிலான தெளிவுபடுத்தல்களும் முன்வைத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(இ) 2018ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள "Fan Performance Testing Facility" சொத்து செலவாக எழுதப்பட்டுள்ளதைத் திருத்துதவதற்காக சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள வருடத்துக்கான புத்தகங்களில் அடையாளம் காணுதல் மற்றும் குறிப்பிட்ட வருடங்களுக்கான கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீராக்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபரம | பற்று | வரவு |
|---|---|---|
| (1) சொத்துக்களை அடையாளம் காணுதல் மற்றும் செலவாக பதியப்பட்டுள்ளதை திருத்துதல்<br>• சொத்து கணக்குகள்<br>• தடுத்து வைத்தல் இலாபம் (2018ஆம் ஆண்டுக்கானது) | 4,885,693.26 | 4,885,693.26 |
| (2) வருடங்களுக்கான தேய்வுகளை அடையாளம் காணுதலும் புத்தகங்களில் பதிதலும்<br>• 2018 தடுத்துவைத்தல் இலாபம்<br>• திரட்டு நிதி | 495,261.99 | 495,261.99 |
| (3) • 2019 தடுத்துவைத்தல் இலாபம்<br>• திரட்டு நிதி | 977,138.52 | 977,138.52 |

2015ஆம் ஆண்டில் ஒரு சொத்தாக அடையாளம் காணப்பட வேண்டிய வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள காற்று கம்பங்கள் மீதான நன்கொடையானது வருமானத்தில் இனம் காணப்படவில்லை என்பதுடன், இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவான வரி செலுத்துகையானது, (VAT) முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு பணியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

DRAFT 03
06.02.2023



குறிப்பிட்ட கிடைப்பனவினை வருமானமாக இனம் காணுதல் மற்றும் சொத்துக்கள் பயன்படுத்தப்படுகையில் இதனை ஒரு சொத்தாக அடையாளம் காணப்படாமை ஆகியன பிழைகளாகக் காணப்படுவதனால், இதனைத் திருத்துவதற்கான ஜேர்னல் குறிப்புகளை பின்வருமாறு காட்ட முடியும்.

| விபரம் | பற்று | வரவு |
|---|---|---|
| (1) சொத்துக்கள் கணக்கு<br>WIP (முன்னெடுக்கப்படும் பணிகள்) தடுத்து வைக்கப்பட்டுள்ள மீதி) | 12,816,562.21 | 2,299.935.00 |
| | | 10,516,627.21 |
| (2) தடுத்துவைத்தல் இலாபம்<br>திரட்டு நிதி (2015-2018 ஆண்டுகளுக்கானது)<br>(2015 – 2018 ஆண்டுகளுக்கான) | 9,930,202.00 | 9,930,202.00 |
| (3) • தடுத்துவைத்தல் இலாபம் திரட்டு நிதி (2019ஆம் ஆண்டுக்கானது) | 2,563,312.40 | 2,563,312.40 |

(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் பெறாமை.

SLPSAS-7 (இலங்கை அரச கணக்கிட்டு தரநியம இலக்கம் 07) இற்கு அமைய நடைமுறையற்ற சொத்துக்களின் பயனுறுதிமிக்க ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

SLPSAS-3 இற்கு அமைய மதிப்பீடுகளுடன் வேறுபடும் பட்சத்தில் இதற்கான மீள்திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் நடைமுறையற்ற சொத்துக்களின் பெறுமதியானது, உயர்வானதாகக் காணப்படுவதுடன். இச்சொத்துக்கள் தலைமை அலுவலகம், அம்பாந்தோட்டை, சூரியவலு மின் நிலையம் மற்றும் இங்குரானை நீர்மின் நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. முந்திய வருடங்கள் முதல் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்த மேற்குறிப்பிட்ட கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டுமென அடையாளம் காணப்பட்ட போதிலும், நாட்டில் காணப்பட்ட நிலைமையின் காரணமாக, பல தடவைகள் நாடு மூடப்படுதல், ஊழியர்கள் பகுதி பகுதியாகப் பணிக்கு அழைக்கப்படுதல் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஊழியர்களை வேலைக்கு அழைக்காமை போன்ற விடயங்கள் காரணமாக, மதிப்பீட்டு பணியாட்குழுவினரின் சேவையினைப் பெற்றுக்கொள்வது சிரமமாக அமைந்தது. ஆகையால், எதிர்வரும் வருடத்துக்கான சொத்து மீள் கணிப்பீடு, மேற்கொள்ளப்பட்டு நடைமுறையற்ற சொத்துக்களின் நியாயமான பெறுமதி (fair value) அடையாளம் காணப்பட்டு, சரியான கணக்குகளுக்கான சீராக்கலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(உ) 2017ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றுள்ள இங்குரானை காணியினை மதிப்பீடு செய்து, நியாயமான பெறுமதியை அடையாளம் கண்டு, உரிய முறையில் கணக்குப் பதிவு மேற்கொள்ள வேண்டிய போதிலும், அரசதுறை காணிகள் மீள்கணிப்பீடு (மதிப்பீடு செய்தல்) மதிப்பீட்டுத் திணைக்களத்தின ஊடாக மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இதற்காக பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பி வைகப்பட்டுள்ள போதிலும், நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இந்த விடயத்தில் இவர்களது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 2022ஆம் ஆண்டிலும் இந்த விடயத்தையொட்டியதாக மீண்டும் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் துரிதமாக தலையீடு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஊ) வரவு - செலவிலான நிதி ஏற்பாடு மற்றும் மெய் செலவுக்கு இடையில் ஒப்பீட்டை மேற்கொண்டு, எதிர்வரும் நிதிக் கூற்றுகளின்போது முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

DRAFT 03
06.02.2023

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

(எ) இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம், நிறுவனத்தின் வழக்கு நடவடிக்கைகள் மற்றும் வெளித்தரப்பினருடனான பிணைப்புகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்களின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும். 2020ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதில் நிறுவனம் தோல்வி கண்டுள்ளமையால், எதிர்வரும் வருடங்களுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான வெளிப்படுத்தல்களை சட்டப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்வதற்கும், இதற்கேற்ப, நிதிக் கூற்றுக்களின் மீது தீர்மானிக்கப்படும் தரப்பினர்களுக்கு உண்மையான மற்றும் நியாயமான தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஏ) 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆந் திகதியிலான ஊழியர் நன்மைக் கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகளைக் கணிப்பிடலானது, முழுமையடைந்த வருடங்களுக்காக (ஊழியர் நன்மைக் கொடுப்பனவு சட்டத்துக்கு அமைய) கணிப்பிடப்படுதல் வேண்டும்.

கடந்த வருடங்களில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ள விதத்துக்கு ஏற்ப, ஒதுக்கீட்டைக் கணிப்பீடு செய்தலானது, நாட்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கடந்த வருடங்களில் கணக்காய்வினை மேற்கொள்கையில், இது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை என உணர்கின்றேன்)

2020ஆம் ஆண்டில் கணக்காய்வினை மேற்கொள்கையில், அடையாளம் காணப்பட்டுள்ள இக்கணக்கீடுகள் இசைவாக்கம் பெறாமையினை 2021ஆம் ஆண்டுக்கான கணிப்பீட்டை மேற்கொள்கையில் திருத்தவதற்கு கணக்காய்வு அங்கத்தவர்களுடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

(ஐ) 03 கணக்கு விடயங்களுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் மீதிகளில் ரூ.55.96 வேறுபாடு கணக்காய்வாளர் தலைமை அததிபதியினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆவையாவன,

நிலைபெறுதகு சக்தி பிணை நிதியத்தின் மீதி ரூ.107,419,486 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன், 2020.12.31ஆந் திகதி இது ரூ.196,275,578 எனக் காட்டப்பட்டுள்ளது.

அதிகார சபையினால் 2019ஆம் ஆண்டில் கணினிமயப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது, பிணை நிதியத்தின் முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருமானமானது, வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக, இது திரட்டு வருமானத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. ஆனால், நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்கையில், பிணை நிதியத்தில் சேர்க்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளமையால், நிதிக் கூற்றுக்களினால் முன்வைக்கப்படும் தரவுகள் சரியானதாகும். மேலும், மீதி பரிசீலனைக் குறிப்புகளைத் திருத்துவதற்கு, குறிப்பிட்ட கணினி தரவுகளை உள்ளீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதி வருமானம் ரூ 1,388,606,544/- எனக் காட்டப்பட்டுள்ள போதிலும், இது ரூ.1,342,034,511/- எனக் காட்டப்பட்டுள்ளமையினால், ரூ.46,572,033/- வேறுபாடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது கனிணி மயப்படுத்தப்பட்டுள்ள கணினி முறைமையின் தள்ளிவைக்கப்பட்டுள்ள வருமானத்தில் பற்று வைக்கப்பட்டுள்ளமையினால், இது திரட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது, மீதி பரிசீலனையில் சரியானதாகக் காணப்படினும், நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டுள்ளமையினால், நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படும் தகவல்கள் சரியானதாகும். மேலும், இது தொடர்பிலான மீதி பரிசீலனைக் குறிப்புகளைச் சரிப்படுத்துவதற்கு உரிய கணினி தரவுகளை உள்ளீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களில் திரட்டுக் கணக்கு மீதி மற்றும் மீதி பரிசீலனையில் திரட்டு செலவு மீதி ரூ.247,007 வேறுபாடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், இது மீதி பரிசீலனையில் திரட்டு தடைநீக்கல் செலவு கணக்கு மீதியாகும். இதன்போது நிதிக் கூற்றுக்களுக்கு மீதி பரிசீலனை திரட்டு செலவு கணக்கு மீதிகளுடன் திரட்டு தடைநீக்கல் கணக்கு செலவுகள் சேர்க்கப்பட்டு வெளிக்காட்டப்பட்டுள்ளன.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

(அ) (i) நிதி ஒழுங்குவிதி 396 (இ) இன் பிரகாரம், குறிப்பிட்ட மீதிகளை உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவை கடிதம் வழியாக அறிவிக்கப்பட்டு, காசோலை காலத்தை விஞ்சியுள்ள காசோலையினை நிறுவனத்தின் வருமானமாக மீண்டும் அடையாளம் காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், பிணை வைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

DRAFT 03
06.02.2023



(ஆ) 2020 ஓகஸ்ட் 24ஆந் திகதி வரையில் எமது அதிகார சபையிடம் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை என்பதுடன், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நடாத்த முடியவில்லை. ஆனால், ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நடாத்துவதற்கு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ)

(i) பிரஜைகள் / ஊழியர் பிரமாணக் குறிப்பானது, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் தயார் செய்யப்பட்டு, 2022ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, நிலைபெறுதகு சக்தி அதிகார சபையிடம் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு உரிய தரமான சேவையினை வழங்குதல் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்படும்.

(ii) அதிகார சபைக்கு உரித்தான வாகனங்களின் எரிபொருள் பரிசீலனையினை 2020ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக, திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள முடியவில்லை. 2021ஆம் ஆண்டுக்கான உரிய முறையில் எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கான மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட முகாமைத்துவ சபைக்கு அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் வேலைத்திட்டங்களை 2020ஆம் ஆண்டில் முன்னெடுக்கையில் உலகளாவிய ரீதியில் நாட்டுக்குள் காணப்பட்ட கொரோனா நிலைமை காரணமாக, இந்நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு பாரிய தடைகள் ஏற்பட்ட போதிலும், குறிப்பிட்ட வருடத்தினுள் செயலாற்றுகை திட்டத்தினுள் காணப்பட்ட ஏராளமாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளது.

- 2020ஆம் ஆண்டில் நிலைபேறான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவன ரீதியான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான செயலாற்றுகைத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், தற்போது நிறுவனத்துக்கான செயலாற்றுகை சுட்டியும் (KPI) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(உ) 2020ஆம் ஆண்டுக்கான பொருள் மதிப்பீட்டு அறிக்கை, உரிய முறையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவுக்கு முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

2021 ஏப்ரல் மாதம், இலங்கை நிலைபெறுதகு அதிகார சபையின் வர்த்தக மையத்தை புதிய இடமொன்று இடமாற்றம் செய்ய நேர்ந்தமையினால், இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கொவிட் 19 காரணமாக, குறிப்பிட்ட பண்டங்களை கணிப்பீடு செய்ய முடியாமையினால் அறிக்கையினை முன்வைத்தல் தாமதமடைந்தது.

(ஊ) 2007ஆம் ஆண்டு நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அப்போதிருந்த நிறுவனத்தில் காணப்பட்ட பண்டங்கள் மற்றும் முந்திய வருடங்களில் (2017இற்கு முன்னர்) காணப்பட்ட பண்டங்களுக்கான உரிய நிலையான சொத்து ஆவணம் பராமரிக்கப்படவில்லை என்பதுடன், நிறுவனத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியானது (புத்தகப் பெறுமதி) உயரிய பெறுமதியினைப் பெறுவதனால், பொதுத்துறைக் கணக்குகள் 6 மற்றும் 7இன் பிரகாரம், நடப்பு பெறுமதியை அடையாளம் காண்பதற்காக மீள்மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு (மீள்கணிப்பீடு) எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் முந்திய தரவுகளின் பெறுமதியை நடப்பு ரீதியில் அடையாளம் கண்டு, நிலையான சொத்து ஆவணத்தை முறையாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ) சுற்றறிக்கைகளின் பிரகாரம் கணக்கீட்டு ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை 60 நாட்களுக்குள் (பெப்பரவரி 28ஆந் திகதியில்) முன்வைக்க வேண்டிய போதிலும், 2020 மார்ச் மாதமளவில் நிதிக் கூற்றுக்களைப் பூர்த்தி செய்ததன் பிற்பாடு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஏப்ரல் மாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், நாட்டில் நிலவிய கொவிட் நெருக்கடி காரணமாக, நாடு மூடப்பட்டதன் நிமித்தம், முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட தீர்மானத்தை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், ஓகஸ்ட் மாதத்தில் கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ள போதிலும். கணக்காய்வுப் பிரிவானது அனைத்து நிதிக் கூற்றுக்களிலும், அதாவது,

DRAFT 03
06.02.2023

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

- வருமான அறிக்கை
- நிதி நிலைமை அறிக்கை
- பொருண்மை மாற்ற கூற்றுக்கள் மற்றும்
- காசுப் பாய்ச்சல் கூற்று ஆகிய அனைத்திலும்
- நிதிப் பணிப்பாளர்
- பணிப்பாளர் நாயகம்
- தலைவர்
- பணிப்பாளர் சபை அங்கத்தவரொருவர் கையொப்பமிட்டு, இறப்பர் முத்திரையிட்டு, கணக்காய்வுக்காக முன்வைத்தல் வேண்டும். ஆனால், நாடு ஓகஸ்ட் மாத்தில் மூடப்பட்டமையின் காரணமாக, குறிப்பிட்ட கையொப்பங்கள் சகிதம் ஓகஸ்ட் மாத்திலேயே கணக்காய்வுக்காக முன்வைக்க முடிந்துள்ளது.

காணப்பட்ட கொவிட் 19 நிலைமை காரணமாக, அலுவலகங்கள் மூடப்படுதல் மற்றும் முன்னெடுக்கப்படவிருந்த முகாமைத்துவக் கூட்டங்களில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, நிதிக் கூற்றுக்களை கணக்காய்வுக்கு முன்வைத்தல் தாமதமடைந்துள்ளது.

(ஏ) னுஆயு ∴01-2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றிக்கைக்கு அமைய, எதிர்காலத்தில் வாகன கிரய அறிக்கையினை மாதாந்தம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் வாகன கிரய அறிக்கையானது தவணை ரீதியாக தயார் செய்யப்பட்டுள்ளது.

(ஐ) நாம் காலத்தை நீடிப்பதற்கான அங்கீகாரத்தை 2021 மார்ச் 15ஆந் திகதி கடிதத்தின் வாயிலான வழங்குகையில் சுமார் 95மூ பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினாலும், எமக்கு வழங்கப்பட்டுள்ள செயலாற்றுகை பாதுகாப்பு 2022 ஏப்ரல் 16ஆந் திகதி வரையில் செல்லுபடியானமையினாலும், குறிப்பிட்ட காலப்பகுதியில் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியுமென உணர்ந்தமையினாலும், செயலாற்றுகை பாதுகாப்பினை நீடித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஒ) விலைமனு ஆவணங்களிலான குறைபாடுகளைப் பூர்த்தி செய்தல் பெறுகை பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சரியான வித்தில் இது குறிந்து அறியப்படாமையினால், இது மேற்கொள்ளப்படவில்லை. 5 மில்லியனைவிட விஞ்சுகையில், கம்பனியில் பதிவுசெய்யப்பட்டுள்ள சான்றிதழ்களை மாத்திரம் கொண்டுள்ள நிறுவனங்கள், நிறுவன பெறுகைக்கு உரித்தாவதனால், எதிர்வரும் காலத்தில் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2.3 நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கருமங்களுடன் இசைவாக்கம் அடையாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்

(அ) 2007ஆம் ஆண்டு 35ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் சட்டத்துக்கு அமைவாக, நிலைபெறுதகு சக்தி நிதியம் முன்னெடுக்கப்படினும், சட்டத்தின் 47(2)(அ) பிரிவின் பிரகாரம், இந்த நிதியத்துக்கு திரட்டு நிதியத்திலிருந்து ஆரம்ப மூலதனம் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும், நிலைபெறுதகு சக்தி அதிகார சபை தாபிக்கப்பட்டதன் பின்னர், இந்த நிதியத்துக்கு திரட்டு நிதியத்திலிருந்து நிதி கிடைக்கப் பெறவில்லை.

மேலும், 2007/10/01 ஆந் திகதி நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினை தாபிக்கையில், முன்னர் காணப்பட்ட நிறுவனமான சக்தி நிதியத்தினால் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூ.53 மில்லியனுக்கான வருடாந்த வட்டி வீதம் குறிப்பிட்ட நிதியத்திற்கே வந்து சேர்ந்துள்ளமையினால், 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியளவில் இது ரூ.102 மில்லியன் வரையில் வளர்ந்துள்ளது.

(ஆ) இக்காணியானது தென்ஆசியாவின் முதலாவது வலுசக்தி அலுலகத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு 35ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை சட்டத்தின் 46 (37-டி) இன் பிரகாரம், வலுசக்தியின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான தொழிநுட்பத்தை மேம்படுத்துவதற்கும், இத்தகைய கருத்திட்டங்களிற்காகவும், வலுசக்தி நிதியம் பயன்படுத்தப்படுகின்றது.

(இ) வலுசக்தி துறையின் செயலாற்றுகை அறிக்கை, ஒவ்வொரு வருடமும் தயார் செய்யப்படுவதுடன், இது அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது, எதிர்காலத்தில் அமைச்சர் வழியாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

(ஈ) அரச பங்கினைப் பெற்றுக்கொள்வதற்காக, வரவு - செலவு பிரேரணைகளில் உள்ளடக்கத் தேவையான விதப்புரைகள் நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

DRAFT 03
06.02.2023

2.2.4 வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் உரிய சட்டங்களின் பிரகாரம் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதென்பது.

(அ) அதிகார சபைக்கு உரித்தான வாகனங்களை மேற்பார்வை செய்தவற்கான கருமமாற்றல் முறைமையினை தாபிப்பதற்கு 2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், காணப்பட்ட கொரோனா நிலைமை காரணமாக, கருமமாற்றல் முறைமையினை தாபிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியவில்லை. 2021ஆம் ஆண்டில் இதற்கான பெறுகைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) குறிப்பிட்ட நிதியை வினைத்திறன்மிக்கதாக முதலீடு செய்வதற்கான (அரச வங்கிகளில்) முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் உரிய முறையில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இந்நிதியை முறையாகவும், பயனறுதிமிக்கதாகவும் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. ஏனைய விடங்கள்

(அ) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையானது, 2020 ஒகஸ்ட் 24ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2020ஆம் ஆண்டு நிறைவடைகையில், வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளுக்கு உள்ளக பதவியுயர்வு ஏற்பாட்டுக்கமைய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்குப் பிற்பாடு தொடர்ந்தும் காணப்பட்டுள்ள வெற்றிடங்களில் நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான அத்தியாவசிய பதவிகளுக்கு உதவிப் பணிப்பாளர் (பொறியியல் பதவிக்கான ஆட்சேர்ப்பானது, 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய சிரேஷ்ட மட்டத்திலான 27 வெற்றிடங்களில் 16இற்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்காக, ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொண்டு, உதவிப் பணிப்பாளர் - பொறியியல் பதவியிலான 10 பதவிகளுக்கு, தகுதியுடைய பொறியியலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) 2020ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தில், உத்தேச நிதி மற்றும் பௌதீக இலக்குகள் காட்டப்படவில்லை என்பதுடன், இக்குறைபாடுகளை திருத்தியவாறு 2022ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள செயலாற்றுகை திட்டத்தில் குறிப்பிட்ட இலக்குகள் காட்டப்பட்டுள்ளன.

(இ) சிறிய நீர் மின்சார உற்பத்திக் கருத்திட்டகளுக்காக காணிகளைக் கையகப்படுத்தி, இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமாக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை செயற்படுகின்றது. முதலீட்டாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியானது, நடைமுறை சொத்துக்களின் கீழ் செலுத்தப்பட வேண்டிய நிதியாக அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், குறிப்பிட்ட கருத்திட்டங்கள் பூர்த்தியடையும் வரையில் நிதியை விடுவிக்க முடியாது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.5,049,485 நிதி குறித்து உரிய முதலீட்டுக் கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை உரிய பிரிவுடன் இணைந்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது,

(இ) கிடைக்கப்பெற வேண்டிய நிதியின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூ. 8,406,407 நிதியில் சுஊடு நிறுவனத்தின் கட்டடி வாடகையாக செலுத்தப்பட்டுள்ள ரூ. 8,033,271.ஃரீ நிதி உள்ளடங்கியுள்ளது. இந்நிதியை அறவிடுவதற்காக ஊநுடீ நிறுவனத்துக்கு தொடர்ச்சியாக அறிவித்த போதிலும், அவர்கள் குறிப்பிட்ட நிதியைச் செலுத்தாமையினால், அமைச்சின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்படும் தீர்மானங்களின் மீது நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் செலவாக அடையாளம் காண்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் 2021ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய நிதி தொடர்பில் அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்படுகின்றன.

(உ) நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட பணத்தை அறவிடுதல், மீள்நினைவூட்டல் கடிதங்களை அனுப்பி வைத்தல் மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஊ) ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் கடன் கொடுத்தோருக்காக மீள்நினைவூட்டல் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்காக பதில் வழங்கப்படாதுள்ள விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையினால், வருமானத்தை கணக்கில் பற்று வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தலைவர்
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

# கூட்டுறவு தகவல்கள்

## அதிகாரசபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

## சட்ட அந்தஸ்து

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நியாயாதிக்க அதிகாரசபையாகும்.

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 0112 575 203/0112 575 030 |
| தொலைநகல | : | 0112 575 089 |
| மின்னஞ்சல் | : | info@energy.gov.lk |
| இணையத்தளம் | : | www.energy.gov.lk |

Designed & Produced by
mediaWIZE® Annual Reports
Printed by
Photography by